பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 12 வியாழக்கிழமை (28.07.2005)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :244

# வவுனியாவில் பெரும் எழுச்சி

# தமிழர் உரிமைப் பிரகடனம்

## ஆயிரக்கணக்கானோர் முழக்கமிட நேற்று இரவு வெளியிடப்பட்டது

வவுனியா,ஜூலை28

**தமிழ்த்தேசிய மக்களின் அபிலாஷைகளையும், உணர்வுகளையும், சர்வதேசத்திற்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் உணர்த்தும் வகையிலான தமிழர் உரிமைப் பிரகடன மாநாடு நேற்று வவுனியாவில் பேரெழுச்சியுடன் நடைபெற்றது. ஆயிரக்கணக்கானோர் திரண்டு உரிமைக் கோஷமிட நேற்று முன்னிரவில் பிரகடனம் வெளியிடப்பட்டது. வவுனியா வைரவப்புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தில் ஆயிரக்கணக்கான பேராளர்கள் திரண்டிருக்க தமிழ்த் தேசியத்தின் உரிமைக்குரல் ஓங்கி ஒலிக்கப்பட்டது.**

முற்பகல் 10.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. பொதுச்சுடரை கரும்புலி மாவீரர் லெப்டினன் கேணல் போர்க்கின் தாயார் திருமதி மாப்பாணபிள்ளை ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான மாவீரர் லெப்டினன்ட் கேணல் விக்டரின் தந்தையார் ச.மருசலீன் ஏற்றி வைத்தார்.

ஈகச்சுடர்களை கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சு.பசுபதிப்

(18 ஆம் பக்கம் பார்க்க)

### மாநாடு நடந்தபோது கிரனேட் வீச்சு!

வவுனியா,ஜூலை28

வவுனியாவில் நேற்றுக் காலை ஆரம்பமான தமிழர் உரிமைப் பிரகடன மாநாட்டில் கலந்து கொண்டோரை அச்சுறுத்தும் நோக்குடன் நேற்று அங்கு அடுத்தடுத்து மூன்று குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன. பிற்பகல் வவுனியா பிரகடன மாநாட்டு மண்டபத்துக்கு அண்மித்த பகுதியில் முதற்குண்டு வெடித்தது. அது கிரனேட் வீச்சு எனத் தெரிவிக்கப்பட்டது. மீண்டும் மாலை 5.45 மணிக்கு கிளைமோர்ரகக்குண்டு அதே இடம் அருகே வெடித்தது. மீண்டும் மாலை 6.15இற்கு வவுனியா குருமன்காட்டில் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம் அருகே மூன்றாவது குண்டு வெடித்தது. (எ-க)



மாநாட்டின் ஆரம்பத்தில்....

மேலும் படங்கள் மூன்றாம் பக்கத்தில்

## போர் திணிக்கப்படுமானால் எதிர்கொள்ள அனைத்துத் தமிழர்களும் திரளவேண்டும்

### ம.ம.முன்னணித் தலைவர் சந்திரசேகரன் தெரிவிப்பு

வவுனியா,ஜூலை28

தமிழ்மக்கள் மீது மீண்டும் போர் ஒன்று திணிக்கப்படுமானால் அதனை நாட்டிலுள்ள தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு எதிர்கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன்,

வவுனியாவில் நேற்று நடைபெற்ற தமிழர் எழுச்சிப் பிரகடன மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போர் நடந்த காலத்தில் மூன்று மணி

(18 ஆம் பக்கம் பார்க்க)



எழுச்சி மாநாட்டில்....

# தமிழரின் இறைமையையும் சுதந்திரப்போரையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்

## வவுனியாவில் தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனத்தில் கோரிக்கை

வவுனியா,ஜூலை28

தமிழரின் இறைமையையும், சுதந்திரப் போராட்டத்தையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட தமிழ்த் தேசியத்தின் எழுச்சிப் பிரகடனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுச்சி மாநாட்டின் முடிவில் நேற்றிரவு 8.30 மணியளவில் இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டது. அந்தப் பிரகடனத்தின் முழு விவரம் வருமாறு:-

தென்னிலங்கையில் இன்று பயங்கரமான சிங்கள பௌத்த பேரினவாதம் தலைவிரித்தாடுகிறது. இது தமிழ்பேசும் மக்களின் ஜனநாயக வழியில் அமைந்த எந்தவொரு தீர்வுக்குமான கதவுகளையும் முற்றாக மூடியுள்ளது.

இந்நிலையில் தமிழர் தாயகத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் தமிழ்பேசும் மக்களாகிய நாம் இன்று அடைந்துள்ள அவலமானதும் ஆபத்தானதுமான நிலையை சர்வதேச சமூகத்தின் முன்னால் வெளிப்படுத்தி எமக்கான நியாயத்தையும் அங்கீகாரத்தையும் கோருகின்றோம்.

தமிழ்பேசும் மக்களாகிய நாம் இலங்கைத் தீவினை ஐரோப்பியர் ஆக்கிரமிக்க முன்னர் தனியரசாக இருந்து வந்துள்ளோம். 1833ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையில் ஒற்றையாட்சி முறையைப் புகுத்தியபோது தமிழர் தாயகம் சிங்கள தேசத்தோடு இணைக்கப்பட்டது. அப்பொழுது அது தன் இறைமையை இழந்ததையும், அதன்பின் 1948 இல் இலங்கையை விட்டு ஆங்கிலேயர் வெளியேறியபோது தமிழ் பேசும் மக்களின் இறைமையை எண்ணிக்கையில்

(2 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு இளைஞன் கொழும்பில் சுட்டுக்கொலை

கொழும்பு,ஜூலை28

மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் கொழும்பில் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சூட்டுச் சம்பவம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் கொழும்பு, டாம் வீதியில் உள்ள லொட்ஜ் ஒன்றில் இடம் பெற்றுள்ளது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

### ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூலை28

ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் மட்டரகமாக விமர்சனம் செய்த தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் செயலைக் கண்டித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஊடகவியலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பத்திரிகைகள்,தொலைக்காட்சி மற்றும்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவே!

### சுதந்திரக் கட்சியின் மத்திய குழு இன்று காலை கூடி அங்கீகரிக்கும்

கொழும்பு,ஜூலை28

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளரைத் தெரிவு செய்தற்காக இன்று கூடவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு, கட்சிக்குள் எழுந்திருக்கும் ஜனாதிபதி வேட்பாளர் சர்ச்சைக்கு நிரந்தர முற்றுப்புள்ளியை வைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதி வேட் பாளராகத் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பெயரை அது அங்கீகரிக்கும் என்பது பெரும்பாலும் உறுதியாக்கிவிட்டது எனக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்த மத்தியகுழுக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் 54 பேரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென அவர்களுக்கு கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தனித்தனியான அறிவித்தலை நேற்று அனுப்பியிருக்கிறார்.

சுதந்திரக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நியமிப்பதற்கு இன்றைய மத்திய குழு அங்கீகாரம் வழங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்ற அதேசமயம், கட்சியின் மற்றுமொரு சிரேஷ்ட உறுப்பினரான அமைச்சர் அநுர பண்டாரநாயக்கவிற்கு அடுத்த பிரதமர் பதவியை வழங்குவதற்கும் கட்சி முடிவு செய்யுமென சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் கூறின.

ஜனாதிபதி வேட்பாளராகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட வேண்டுமெனக் கோரும் யோசனையை ஜனாதிபதி இன்றைய கூட்டத்தில் முன்வைப்பாரென்றும், அதற்கு கட்சி ஏகமனதான அங்கீகாரத்தை வழங்கும்

(18 ஆம் பக்கம் பார்க்க)

### மோதரைப் பொலீஸ் அதிகாரி கைதாகி பிணையில் விடுவிப்பு

கொழும்பு,ஜூலை28

கொழும்பு, மோதரை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் இன்ஸ்பெக்டர் சாந்த விக்கிரமசிங்க லஞ்ச, ஊழல் வழக்கில் நேற்று கைது செய்யப்பட்டு கொழும்பு பிரதம நீதிவான் குசல சரோஜினி வீரவர்த்தன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை ஐயாயிரம் ரூபா காசுப் பிணையிலும், ஐம்பதினாயிரம் ரூபா

(18 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் இளம் குடும்பஸ்தர் செவ்வாய் இரவு சுட்டுக்கொலை!

ஏறாவூர், ஜூலை28

மட்டக்களப்பு தலைமையகப் பொலீஸ் பிரிவிற்குட்பட்ட புதூர் - திமிலைதீவு வீதியில் வைத்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் திமிலைத்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையாரான பங்கிராஜா ஜோர்ஜ் (வயது 30)

(18 ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் மாறுபட்ட கருத்துக்களால் சர்வதேச சமூகம் கடும் அதிருப்தி

கொழும்பு,ஜூலை28

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது அமைச்சர்களும் வெளியிட்டுவரும் மாறுபட்ட கருத்துகள் சர்வதேச சமூகத்தின் அதிருப்தியை அதிகரிக்கச்செய்துள்ளன. இதனால் இலங்கைக்கு கிடைக்கவிருக்கும் உதவிகள் தடைப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என அபாய அறிவித்தல் ஒன்றை விடுக்கின்றார் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உரிய வேளையில் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தவேண்டும் என சர்வதேச ஜனநாயக அமைப்பு விடுத்த அறிக்கையை ஜனாதிபதியின் தம்பி அநுரா பண்டாரநாயக்க உட்பட சிரேஷ்ட அமைச்சர்கள் பலரும் தூக்கிப் பிடித்துக்கொண்டு கடுமையாக விமர்சனம் செய்தனர். உள்நாட்டு விடயத்தில் தலையிட சர்வதேச சமூகத்திற்கு என்ன உரிமை உண்டு எனக் கண்டித்தனர்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானத் தூதுவர்களாகக் கடமையாற்றும் நோர்வே, பாரபட்சமான முறையில் செயற்படுகின்றது. பெரும்பான்மைச் சிங்களவர்கள் நோர்வேயின் செயற்பாடுகள் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர். - என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பகிரங்கமாகவே கூறி வருகின்றார்.

வெளிநாட்டவர்கள் எமக்கு சுயமாகவே உதவ முன்வருகின்றனர். ஆனால், அதனை அரசு உரியமுறையில் பயன்படுத்துவதற்குத் தவறிவிட்டது. அமைச்சர்களின் பேச்சுக்கள் சர்வதேச மட்டத்தில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.

வெளிநாட்டவர்கள் இலங்கை விடயத்தில் தலையிடக்கூடாது என ஒருபுறம் கோஷம் எழுப்பிக்கொண்டு மறுபக்கம், இலங்கையில் போர்நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் அமுல்படுத்துவதற்கு டோக்கியோ கூட்டுத் தலைமைகள் உதவ வேண்டும் என ஜனாதிபதி கோரிக்கை விடுக்கின்றார். இரண்டே தினங்களுக்குள் இரண்டு விதமாகப் பேசும் அரசை நம்பி வெளிநாட்டுத் தலைமைகள் எப்படி உதவி செய்யும்?

சமாதானப் பணிகளில் ஈடுபட்டுள்ள நோர்வே மீது வெளிநாட்டமைச்சர் குற்றம் சுமத்துகின்றார். இந்த நிலையில் எப்படி அவர்கள் சமாதானப் பணிகளில் ஈடுபடுவார்கள்?

உள்நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்று கூறிக்கொண்டே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்க உதவும்படி கேட்டால் அதில் மட்டும் எப்படி அவர்கள் தலையிடுவார்கள் எனவும் கேள்வி எழுப்புகின்றார் பேராசிரியர் பீரிஸ்.

ஜனாதிபதியினதும், அவரது சகாக்களினதும் பேச்சுகள் நமது நாட்டின் மீதான வெளிநாடுகளின் நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

(எ-க)

# சின்னமடுவுக்கு வரும் யாத்திரிகர்களுக்கு வழமைபோன்று அடிப்படை வசதிகள்

## பிரதேசசெயலகக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாத்திரைத் தலங்களில் ஒன்றான ஊர்காவற்றுறை சின்னமடுமாதா தேவாலயத்தின் வருடாந்தப் பெருவிழாவில் கலந்து கொள்ளவரும் யாத்திரிகர்களுக்கு வழமை போன்று அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சின்னமடு மாதா தேவாலயத்தின் வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 4ஆம்,5ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்தப்பெருவிழாவில் கலந்து கொள்ளவருகைதரவிருக்கும் யாத்திரிகர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பது தொடர்பான கூட்டம் கடந்த வாரம் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர்.பணிமனையில் நடைபெற்றது.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசஅதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், சின்னமடு பங்குத்தந்தை வணபிதா ஆ.பீற்றர் துரைரத்தினம், வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் செயலாற்று முகாமையாளர் கே. பாலசிங்கம், ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் ஏ. கணேசானந்தராசா, மினிபஸ் சங்கத் தலைவர் இ.சந்திரன், மற்றும் கிராம அலுவலர்கள், பொதுக்சுகாதாரப் பரிசோதகர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

- ஊர்காவற்றுறை பிரதேச சபை ஊழியர்களாலும், கிராமஅலுவலர் மூலமாக சிரமதான அடிப்படையிலும் ஆலயச்சூழலில் துப்புரவு வேலைகள் நடைபெறும்.
- தேவாலயச் சுற்றாடலில் ஐஸ்கிறீம் விற்பனையில் ஈடுபடுவோர், சிற்றுண்டிச் சாலை நிறுவி விற்பனையில் ஈடுபடுவோர் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் - ஐஸ்கிறீம் விற்பனையாளர்கள் ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யப்படும் இடங்களில் சுகாதாரவிதிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. என்பதை நிரூபிக்கும் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் என்றும் - பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ். கார்த்தீபன் தெரிவித்தார்.
- வழமைபோன்று ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை பிரதேசசபை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரின் திருவிழாக்காலப் பணிமனைகள் தேவாலயச் சூழலில் இயங்கும்.
- யாத்திரிகர்களின் நன்மைகருதி குடிதண்ணீர், மலசல கூடவசதிகள் போதியளவில் செய்து கொடுக்கப்படும்.
- வடபிராந்திய போக்குவரத்துச் சபையும், தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கமும் வழமை போன்று யாழ்ப்பாணம் மற்றும் ஊர்காவற்றுறை நகரப் பகுதியில் இருந்து தேவாலயத்துக்கு விசேட பஸ் சேவைகளை நடத்தும். எதிர்வரும் 4ஆம் திகதி பிற்பகலில் இருந்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் யாழ். பஸ் நிலையத்திலிருந்து தேவாலயத்துக்கு சின்னமடு என்ற அறிவிப்புப் பலகை பொருத்தியவாறு விசேட பஸ்சேவைகளை நடத்துவர்.

கூட்டத்தின் இறுதியில் உரை நிகழ்த்திய உதவி அரச அதிபர் க. ஸ்ரீமோகனன், இவ்வருட உற்சவத்தில் பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுவதால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் ஆற்றவேண்டிய பணிகள் பல உள்ளன - என்றார்.

(எ)

# தமிழரின் இறைமையையும், சுதந்திரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பான்மையாக இருந்த சிங்களவரிடம் ஒப்படைத்துச் சென்றதையும் சுட்டிக்காட்டுகிறோம்.

இவ்வாறு சிங்களச் சமூகம் முறையற்ற வகையில் பெற்றுக்கொண்ட இறைமையின் மூலம், நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி மிக அநாகரிகமான முறையில் தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்பட்டனர். குடியுரிமை சட்டத்தின் மூலம் இலட்சக்கணக்கான மலையகத் தமிழ்மக்களின் குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டது. தனிச்சிங்கள சட்டத்தின் மூலம் மொழியுரிமையும், வேலைவாய்ப்பு உரிமையும் பறிக்கப்பட்டது. கல்வித் தரப்படுத்தல் சட்டம் மூலம் கல்வி உரிமை மறுக்கப்பட்டது. பயங்கரவாத தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பன மூலம் முழு மனித உரிமையும் மறுக்கப்பட்டது. எமது பாரம்பரிய வாழ்விடங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக நிலச் சூறையாடலுக்குட்பட்டு எமது குடித்தொகைப் பரம்பல் முற்றாகச் சிதைக்கப்பட்டது. இவ்வாறாகத் தமிழ்பேசும் மக்களாகிய எமது வாழ்வுரிமை பறிக்கப்பட்டது.

சட்டங்கள் மட்டுமன்றி இலங்கைத்தீவின் அரசமைப்புக்களுமே இனவாத ஒடுக்குமுறைக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டன. சோல்பரி ஆணைக்குழுவின் அரசமைப்பில் சிறுபான்மை மக்களைப் பாதுகாக்கவென உருவாக்கப்பட்ட 29 ஆவது பிரிவு பின்னர் 1972ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சோசலிச ஜனநாயகக் குடியரசு அரசமைப்பின் மூலம் நீக்கப்பட்டது. இந்த அரசமைப்பில் பௌத்தமதம் அரச மதமாக்கப்பட்டு இன ஒடுக்குமுறைக்கான அரசமைப்பு வடிவமாக்கப்பட்டது. 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசமைப்பிலும் இது மேலும் தீவிரமாக்கப்பட்டது. எனவே, நீதி வழங்கப்பட வேண்டிய அரசமைப்பு அநீதியின் உறைவிடமானது.

இத்தகைய இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராகத் தமிழ்பேசும் மக்களின் அப்போதைய அரசியல் தலைமை அங்கீகரிக்கப்பட்ட நாகரிகமான அரசியல் வழிமுறைகளையும் மென்முறைப் போராட்ட வடிவங்களையும் கைக்கொண்டது. அவற்றினைத் தணிவிக்கும் முகமாகச் சிங்கள ஆட்சியாளர்கள் ஒப்பந்தங்கள் செய்வதையும் பின் அவற்றினைக் கிழித்தெறிவதையும் வழமையாகக் கொண்டிருந்தார்கள். 1957ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும் 1965ஆம் ஆண்டு டட்லி - செல்வா உடன்படிக்கையையும் இதற்குச் சன்றாக வைக்கின்றோம். இவ்வாறாக மென்முறைப் போராட்ட வடிவங்களைக் கைக்கொண்டபொழுது எம்மக்கள் மீது மிக மோசமாக வன்முறைகள், இனப்படுகொலைகள், பாலியல் கொடூரங்கள் என்பன பிரயோகிக்கப்பட்டன.

இந்நிலையில் 1970 களின் முற்பகுதியில் ஆயுதம் தாங்கிய தமிழ்மக்களின் தற்காப்புக்கும் விடுதலைக்குமான போராட்டத்துக்கு தமிழர் தரப்பு நிர்ப்பந்திக்கப்படுகிறது.

எனவே, அமைதிவழியில் அரசியல் தீர்வுகளை எட்டுவது இயலாது என்பதை ஏற்றுக்கொண்ட தமிழ்த் தலைமைகள், 1976ஆம் ஆண்டு மே 14ஆம் நாள் வட்டுக்கோட்டையில் தமிழீழப் பிரகடனத்தை வெளியிட்டனர். பின்னர் அரசியல் அரங்கில் அதற்கான மக்கள் ஆணையை 1977ஆம் ஆண்டு நடைபெற்ற ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றுக்கொண்டனர்.

ஆயுதம் தாங்கி எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட நாம் தமிழ் மண்ணையும் தமிழ்பேசும் மக்களையும் ஆழமாக நேசிக்கும் ஆற்றல் மிகுந்த சிறந்த ஒரு தேசியத் தலைவரையும் ஒரு மரபுவழிப் போரை நடத்தவல்ல படையணிகளையும் கண்டு நிமிர்ந்தெழுந்தோம். இதன்மூலம் இலங்கைத் தீவில் ஒரு தனித்தேசிய இனமாகத் தமிழ் மக்கள் நாம் வாழ்ந்து வருகின்றோம் என்னும் உண்மையை உலக அரங்கில் ஓங்கி ஒலித்தோம்.

இப்போராட்ட காலத்தில் சிங்கள ஆட்சியாளர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போதும் தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பும் இன அழிப்பும் தமிழர் தாயகத்தில் நடத்தப்பட்டன. கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுகள், எறிகணைவீச்சுகள், ஆகியன பாடசாலைகளிலும் மக்கள் குடியிருப்புக்களிலும் வழிபாட்டுத் தலங்களிலும் அடிக்கடி நடத்தப்பட்டு எமது மக்கள் பச்சிளம் பாலகர் முதல் முதியோர் வரை கோரமாகப் பலியெடுக்கப்பட்டனர்.

பலவிதமான இராணுவ நடவடிக்கைகளாலும் சொந்த மண்ணிலிருந்து தமிழ்மக்கள் இடம்பெயர்க்கப்பட்டு, ஏதிலிகளாக அலைக்கப்பட்டனர், இத்தகைய அரச பயங்கரவாதக் கொடூரங்களையெல்லாம் ' அரசு' என்ற முகத்திரை கொண்டு சர்வதேச சமூகத்திற்கு முன் சிங்கள பௌத்த பேரினவாதம் மூடி மறைத்தது. ஆயினும் எமது விடுதலைப் போராட்டம் ஆக்கிரமிப்புக்களை எதிர்கொண்டு, முறியடித்து வெற்றிகளைக் குவித்தது. இந்த வெற்றிகளின் பின்னால் தமிழ்மக்கள் அனைவரும் பொங்கு தமிழர்களாய் கிளர்ந்தெழுந்து தேசிய விடுதலைப் போருக்குத் தோள்கொடுத்தனர்.

இந்த வரலாற்றுப் போக்கில் தமிழர் தாயகத்தில் தமிழ்பேசும் மக்களுக்கு என்றொரு நடைமுறை அரசுக்கான கட்டுமானங்கள் நேர்த்தியான முறையில் கட்டியெழுப்பப் படுகின்றன.

இந்நிலையில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை யுத்தத்தினால் வெல்லமுடியாது என்பதை சிறிலங்கா அரசு உணர்ந்து கொண்டது. சமகாலத்தில் சர்வதேச சமூகம் இவ்இன முரண்பாட்டை அமைதிவழியில் தீர்ப்பதற்கான வாய்ப்பை எமது தேசியத் தலைமையிடம் கோரியது. எமது தேசியத் தலைமை தாமாக முன்வந்து யுத்தநிறுத்தம் செய்துகொண்டது.

வேறுவழியின்றியும் சர்வதேச அழுத்தம் காரணமாகவும் ஸ்ரீலங்கா அரசு தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்பாடு செய்ய முன்வந்தது. அதன்படி 22.02.2002 ஆம் நாளில் நோர்வே அரசின் அனுசரணையுடன் ஸ்ரீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரனும் கையொப்பமிட்டு ஒரு யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டது.

தொடர்ந்து ஆறுசுற்றுப்பேச்சுக்கள் நடத்தப்பட்டன. இப்பேச்சுக்களின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைச் சிங்கள அரசு நடைமுறைப்படுத்தத் தவறியது. இதனால், நேரடிப்பேச்சுக்கள் நின்றுபோக இடைக்கால யோசனையாக இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான வரைபு முன்வைக்கப்பட்டது. இதுபற்றியும் தொடர்ந்து பேச ஸ்ரீலங்கா அரசு முன்வராததால் பேச்சுக்களை மீண்டும் தொடர்வதற்கான சாத்தியங்கள் முற்றாக அருகிப்போயின.

இவ்வாறாக கடந்த மூன்றரை ஆண்டுகளாய் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வுக்கான எதிர்பார்ப்புக்கள் யாவும் பொய்த்துப் போய்விட்டன. ஸ்ரீலங்காப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் வளம் நிறைந்த எமது சொந்த நிலங்களும் செல்வம் கொழிக்கும் எமது கடல் வளமும் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் முடக்கப்பட்டுள்ளன.

இறுதியாக உலகை உலுக்கிய ஆழிப் பேரலைப் பேரழிவுக்குப் பின்னரும் சிங்கள மேலாதிக்கப் போக்கும் மாறவில்லை என்பதை ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பொதுக்கட்டமைப்புக்கு நேர்ந்த விபத்து நிரூபித்தது. மனிதப் பேரழிவு அவலங்களால்கூட சிங்களபௌத்த பேரினவாத வெறிக்குள் இறுகிப்போயிருக்கும் நெஞ்சுகளை மாற்றமுடியாது என்பதனை உலகம் கண்டுகொண்டுள்ளது.

இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டுப் பதவிக்கான போட்டியில் சிங்கள அதிகார வர்க்கம் முற்றாகச் சிக்கியுள்ளது. மீண்டும் ஒரு யுத்தத்தின் மூலம் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தைத் தோற்கடிப்பதற்கான படைக்கலப் பெருக்க நடவடிக்கைகளையும் பாதுகாப்பு உடன்படிக்கைகளையும் அவர்கள் செய்து வருகின்றார்கள் இவை யாவும் சமாதான நடைமுறைக்கான சர்வதேச சமூகத்தின் ஈடுபாடு இலங்கைத் தீவில் நிகழ்ந்து கொண்டிருக்கும்போதே நடைபெறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

இந்நிலையில் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான எந்தவொரு தீர்வையும் முன்னெடுக்கமாட்டார்கள் என்பதை நாம் மீண்டும் ஒருமுறை உறுப்படுத்திக் கொள்கின்றோம். இந்த உண்மைகளை சர்வதேச சமூகமும் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கால நடவடிக்கைகள் மூலம் புரிந்துகொண்டிருக்கும் என்பதையும் நாம் உணர்ந்துகொள்கின்றோம்.

இந்த உண்மை நிலையின் காரணத்தினால் நாம் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாகச் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். எனவே, எமது தாயக நிலத்தையும் கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் ஸ்ரீலங்கா இராணுவம் எமது மண்ணை, கடலை விட்டு உடனடியாக வெளியேறவேண்டும் என்றும்-

எமது நிலத்தில், எமது பலத்தில் எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாக வேண்டும் என்றும்-

அந்த உன்னதமான உரிய சுதந்திர வாழ்வை நோக்கி தமிழ்மக்கள் அணிதிரண்டபடியே உள்ளோம் என்பதையும் இவ் எழுச்சிப் பிரகடனத்தின் மூலம் முன்வைக்கும் அதேவேளை, தமிழ்பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ்வுரிமையையும் சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு எமது மரபுவழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எம்மையும் எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்கவேண்டுமென்று சர்வதேச சமூகத்தை நாம் கோருகின்றோம். - என்று அதில் உள்ளது.(எ-த-7-164-190)

# வவுனியா எழுச்சி மாநாட்டின் சில காட்சிகள்....













## விண்ணில் செலுத்தப்பட்ட டிஸ்கவரியின் வெப்பத்தடுப்பு ஓடு உடைந்து வீழ்ந்தது

### நாஸா விஞ்ஞானிகள் கலக்கம்

'டிஸ்கவரி' விண்கலம் நேற்றுமுன்தினம் செலுத்தப்பட்டபோது அந்த ஓடத்தின் கீழ் பகுதியில் இருக்கும் வெப்பத் தடுப்பு ஓடு சிறிய அளவில் உடைந்து வீழ்ந்துள்ளமை தொடர்பாக, வெளிப்புற எரிபொருள் தாங்கியிலிருந்து கறுப்பு நிறப் பொருளொன்று வீழ்ந்தது பற்றியும் நாஸா விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலம்பியா விண்கலம் விண்ணில் வெடித்துச் சிதறியதையடுத்து கடந்த இரண்டரை ஆண்டுகளாக விண் ஓடங்களை விண்ணில் செலுத்துவதை இடை நிறுத்தியிருந்த நாஸா விண்ணாய்வுக் கழகம் நேற்றுமுன்தினம் டிஸ்கவரி விண் ஓடத்தை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.



டிஸ்கவரி விண் கலம் விண்ணில் செலுத்தப்பட்ட போது அதில் பொருத்தப்பட்டிருந்த ஒளிப்படக் கருவி ஓடத் தின் கீழ் பகுதியிலி ருந்து சிறிய துண்டுகள் உடைந்து விழுவதைப் படம் பிடித்தது. இந்த வீடியோ ஒளிப்படத்தை நுணுக்கமாக ஆராய்ந்த விஞ்ஞானிகள் கலத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள வெப்பத் தடுப்பு ஓடு சிறிய அளவில் உடைந்து வீழ்ந்துள்ளதை உறுதி செய்துள்ளனர். சுமார் ஒன்றரை அங்குல அளவிற்கு வெப்பத் தடுப்பு ஓடு உடைந்து வீழ்ந்துள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று விண்கலத்தின் வெளிப்புற எரிபொருள் தாங்கியில் இருந்த கறுப்புநிறப் பொருளொன்று வீழ்வதை தரையிலிருந்து சில ஊடகவியலாளர்கள் படம்பிடித்துள்ளனர். இந்த இரு சம்பவங்களாலும் விண்கலத்திற்கு ஏதாவது பாதிப்புகள் ஏற்படுமா என்பது தொடர்பில் நாஸா விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். (8)

## மகாராஷ்டிராவில் தொடர் மழை: 150 இற்கும் மேற்பட்டோர் பலி?

மும்பை,ஜூலை28

மகாராஷ்டிரத்தின் கொங்கண் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் பெய்துவரும் பெரும் மழையால் ரயில் பாதைகளில் நீர் நிறைந்து காணப்படுகிறது. ரயில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.



இதையடுத்து நேற்று கல்லூரி மற்றும் அரசு அலுவலகங்களுக்கு பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மழையால் பாதிக்கப்பட்ட ராய்காட் மற்றும் ரத்னகிரி மாவட்டங் களை முதல்வர் விலாஸ்ராவ் தேஷ்முக் நேற்றுப் பார்வையிடுவதாக இருந்தார். எனினும், தொடர்ந்து கனமழை பெய்துவருவதால் முதல்வர் பார்வையிடும் நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்பட்டன.

அடுத்த 48 மணிநேரத்திற்கு கனமழை இருக்கும் என்பதால் மக்கள் வீடுகளைவிட்டு வெளியே வரவேண்டாம் என மகாராஷ்டிர அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

மும்பை - கோவா நெடுஞ்சாலை மழைநீரில் மூழ்கியுள்ளது. நூற் றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் மாங்கூன் பகுதியில் நிறுத்தப்பட்டுள் ளன. தாழ்வான பகுதிகளிலிருந்து 600 இற்கும் மேற்பட்டோர் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

ராய்கட் மாவட்டம் ஜூய் கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 150 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள் ளனர் என அஞ்சப்படுகின்றது. நிலச்சரிவினால் ஜூய் கிராமம் மாநிலத்திலிருந்து துண்டிக்கப் பட்டுள்ளது. போலத்பூர், கோர்கான், மங்கான் ஆகிய பகுதிகளிலும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இருந்தாலும், பெரும் மழை காரணமாக மீட்புப் பணியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மோசமான வானிலை காரணமாகக் கடற்படை ஹெலிகொப்டர்கள் சம்பவ இடத்திற்குச் செல்லமுடியாத நிலையில் உள்ளன.

## வடகொரிய அணு ஆயுதப் பிரச்சினை; 6 நாடுகளின் பேச்சு பீஜிங்கில் ஆரம்பம்

பீஜிங், ஜூலை28

அணு ஆயுதத் திட்டங்களைக் கைவிடுமாறு வடகொரியாவை வலியுறுத்தும் பிரச்சினை தொடர்பாக அந்நாடு உள்ளிட்ட 6 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சு சீனத் தலைநகர் பீஜிங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது.

சீனா, வடகொரியா, அமெரிக்கா, ரஷ்யா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய 6 நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

முதலில் பிரதிநிதிகள் மத்தியில் சீன வெளியுறவு அமைச்சர் லீ ஜாவோஸிங் பேசினார்.

கொரிய தீபகற்பத்தை அணு ஆயுதமற்ற பகுதியாக மாற்றும் முயற்சியில் இப்பேச்சினால் முன்னேற்றம் ஏற்படும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அணு ஆயுதத் திட்டங்களை ரகசியமாக மேற்கொண்டு வருவதாக வடகொரியா மீது அமெரிக்கா 2002 ஒக்ரோபரில் இருந்தே குற்றஞ்சாட்டிவருகிறது. (8)

## உலக மரபுச் சின்னங்கள் பட்டியலில் நந்ததேவி மலர்கள் தேசியபூங்கா

மும்பை,ஜூலை28

உலக மரபுச் சின்னங்களின் பட்டியலில் நந்ததேவி மலர்கள் பள்ளத்தாக்கு தேசியப் பூங்கா சேர்க்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் சமீபத்தில் நடைபெற்ற யுனெஸ்கோ அமைப்பின் உலக மரபுச் சின்னங்கள் குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

மேற்கு இமயமலைப் பகுதியில், நந்ததேவி தேசியப் பூங்காவின் விரிவாக்கமாக அமைந்துள்ளது இது. நந்ததேவி தேசியப் பூங்கா 1988இல் உலக மரபுச் சின்னங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டது.

எழில்மிகு ஆல்பைன் மலர்த் தோட்டங்களுக்கும், புல்வெளிகளுக்கும், இயற்கை அழகுக்கும் புகழ்பெற்றது இந்த மலர்கள் பள்ளத்தாக்கு. கறுப்புக்கரடி, பழுப்புக்கரடி, பனிச் சிறுத்தை, நீலநிற ஆடு போன்ற அரிய வி[illegible] கினங்களும் இந்த மலர்ப் பள்ளத்தா[illegible]ல் காணப்படுகின்றன. (8)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புடைவைக் கடைக்குரிய அலுமாரி முன் கதவு-கீழ்ப்பகுதி கண்ணாடியுடனும் பிறேமுடனும் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். தொடர்பு: த.சங்கரப்பிள்ளை, இல.209, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (38245)

## கார் விற்பனைக்கு

3 ஸ்ரீ XXXX தொடர் இலக்கமுடைய FORD ANGELIA கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: T.P.: 0777 283824, 077 6171541. (சி-44372)

நிசான் சனி கார் (சில்வர் கலர்-Full Option) சுப்பர் சலூன் கார் (குளிரூட்டப்பட்டது) விற்பனைக்குண்டு. தொடர்பு: 396, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோயிலடி, முன்னைய உதயன் பணிமனை ஒழுங்கை, யாழ்ப்பாணம். சந்திக்க வேண்டிய நேரம். 8.30a.m.5p.m. (38242)

## காணி விற்பனைக்கு

நான்கு புறமும் மதிலால் சூழப்பட்ட 8½ பரப்புக்காணி கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கலட்டி லேனில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 99, சிவன் கோயில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். T.P.: 021 222 7940, (38178)

## தவறிவிட்டது

கடந்த 25.07.2005 இல் பெறுமதிமிக்க நகைகள் (கைக்குட்டையில் சுற்றியபடி) சுதுமலைச் சந்திக்கும் சண்டிலிப்பாய்க்கும் இடையில் மினிபஸ் பயணத்தின்போது பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அறியத் தரவும். தயவுசெய்து தந்துதவுங்கள். திருமதி ஜெயக்குமார் சுசிலாதேவி, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். T.P.: 0779081801 (38236)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (கிறீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு

இல.55, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.ராதாகிருஷ்ணன், 77, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (38164)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1975 அனுஷம், விருச்சிக ராசி, 12 இல் செவ்வாய், கிரகபாவம்31 ¾, உயரம் 5'8', A/L சித்தியடைந்த U.K. இல் பிரஜாவுரிமை பெற்ற மணமனுக்கு படித்த, அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு: சிவாலயா,68/15, சட்டநாதர் வீதிநல்லூர். T.P.: 021-222 7844. (38246)

## அபூர்வ ஜோதிடம்

தெய்வீக சக்தியுள்ள மருந்தில் தீராத மர்ம வியாதிகள் குணப்படல், அதிர்ஷ்ட காலம் அறிதல். சனி, ஞாயிறு 8.30-2p.m. விதானையார் வளவு, உயரப்புலப்பிள்ளையார் கோயிலடி, ஆனைக்கோட்டை (38236)

## பிரிவுபசார வைபவம்

ஓய்வு பெற்ற பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் சம்பந்தர் சிவராஜசிங்கத்துக்கு யாழ். மாவட்ட உபதபால் அதிபர்கள் சங்கம் அளிக்கும் பிரிவுபசார வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்ட உபதபால் அதிபர் சங்கத்தின் தலைவர் என்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். இந்த பிரிவுபசார வைபவத்தில் தபால் துறையைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டு உரை யாற்ற உள்ளனர். (ஜ-11)

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்– யாழ் கிளை சாரதிகளுக்கான வெற்றிடம்

*எமது கிளைக்கு சாரதிகள் தேவைப்படுகின்றனர். அனுபவமுள்ள சாரதிகள் தமது சுய விவரத்துடன் 03.08.2005இற்கு முன்னதாக கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும். சாரதிகள் லொறிகள் ஏனைய வாகனங்களும் ஓட்டக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.*

கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி.44373) (39-19-18)

## புனித அன்னம்மாள் திருவிழா

வலித்தூண்டல் கீரிமலை புனித அன்னம்மாள் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

அன்றையதினம் காலை 9 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருவுருவப் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

அனைவரும் பங்குகொண்டு அன்னையின் அருள்பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இளவாலை, சேந்தாங்குளம் சந்திகளிலிருந்து விசேட பேருந்து சேவை ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(38241) (39-19-18) பங்குத் தந்தையும்,பங்கு மக்களும்.

## SRI LANKA RED CROSS SOCIETY JAFFNA DISTRICT

**in conjunction with the Australian Red Cross**

## VACANCY FOR COMMUNITY DEVELOPMENT OFFICER

We are seeking a motivated person with qualifications and demonstrated experience in the area of Community Development to work with the Construction Delegate of the Australian Red Cross on the current Tsunami Reconstruction Housing Program Phase 3. The position will involve regular travel to 4 communities in the Vadamarachy East Division and the successful applicant will be required to stay in Kilinochchi on a regular basis.

**Duties applicable:**

1. Work towards the achievement of Sri Lankan Red Cross (SLRCS) and Australian Red Cross (ARC) goals through effective relations and teamwork.
2. Ensure understanding of roles, responsibilities, lateral relationships and accountabilities.
3. Perform other work related duties and responsibilities as may be assigned by the supervisor.

**Specific responsibilities and accountabilities**

1. Participate in and represent SLRCS's and ARC's interests at regular district level coordination meetings.
2. Liaise with District authorities (GA and PDS) anNGO's regularly.
3. Build relationships with SL RCS volunteer groups and beneficiary communities
4. Assist the SLRCS and ARC in the ongoing process of involving communities in participating with the re-building process.
5. Liaise closely with key members of the beneficiary communities, including Village Development Forum Leaders.
6. Work with ARC Construction Delegate to undertake extensive community consultations and address the social needs of the community.
7. Assist SLRCS, ARC, contractors and communities to overcome issues in a cooperative and sensitive manner.
8. Provide accurate translation to and from Tamil and English when required both orally and in written form.

Applications should accompany testimonials, bio-data and references from previous employers.

**Applications should be sent under registered mail on or before 14th August 2005 to:**

**Branch Executive Officer Srilanka Red Cross Society
Jaffna District Branch
No.73, Kandy Road, Jaffna.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
**சின்னத்துரை கமலாவதி**

தோற்றம் 1954-06-02
மறைவு 2005-06-29

*எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தாயாரின் பிரிவுச் செய்தி கேட்டு எமது துயரில் பங்குகொண்டு சகல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*அன்னாரின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.07.2005) வியாழக்கிழமை பாவற்குளம் கல்லாற்றில் நடைபெற்று, வீட்டுக்கிரியைகள் நாளை (29.07.2005) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

**குடும்பத்தினர்**

மகன் -S.S. சுதன் (கண்ணன்)
(சாரதி, பிரதேச செயலகம் பளை)
மருமகன் - ராஜன்
(ரத்னா ரவல்ஸ் வவுனியா)

**இல.41A உக்குளாங்குளம், வவுனியா.**

(38252)(42-39-18-19)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1981 - 05 - 07
மறைவு 2000 - 07 - 28



அமரர்
**கணேசபிள்ளை கஜேந்திரன்**

*(வவுனியா மத்திய மகா வித்தியாலய உயிரியல் விஞ்ஞானப் பிரிவு மாணவன்)*

*திதி : 02.08.2005 திரயோதசி*

*ஐந்து ஆண்டுகள் கடந்தாலும்
இதயத்தில் உம் நினைவு என்றென்றும்
நின்றே நிறைந்திருக்கும்; நிலைத்திருக்கும்!
உம் பிரிவு எம் நெஞ்சை வாட்டுகின்றதே....*

இல.33, புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

உம் பிரிவால் துயருறும்:
**அப்பா, அம்மா, தம்பிமார், உறவினர், நண்பர்கள்.**

(38249) (39-18-19)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ஒரு கண்ணில் வெண்ணெய் மறுகண்ணில் சுண்ணாம்பு

தென்னிலங்கை அரசைப் பொறுத்தவரை ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்துக்கான பொதுக் கட்டமைப்பு ஏற்பாடு திட்டமிடப்பட்ட ஒரு நாடகம். ஸ்ரீலங்கா ஜனாதிபதி தனக்குச் சாதகமான அரசியல் நன்மைகளை எட்டுவதற்காக கனகச்சிதமாக அதை அரங்கேற்றியிருக்கின்றார்.

- இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

தமிழர்களின் மனிதாபிமானப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அரசியல் தீர்வு முயற்சியாக இருந்தாலும் சரி தமிழ் மக்களுக்கு எது நன்மையளிக்கிறதோ அதனை ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் கட்டமைப்புகள் அனைத்தும் இணைந்து ஏதோ ஒருவகையில் முடிவுக்குக் கொண்டுவந்து விடுகின்றன என விசனிக்கிறார் தமிழ்ச்செல்வன்.

அவர் சுட்டிக்காட்டும் ஒரு கேள்வி - நியாயம் கேட்கும் ஒரு விடயம் - மிக முக்கியமாகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிராகவும் இலங்கை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. வழக்குக்கான விசாரணைத் திகதி போட்டு இழுத்தடிக்கப்படுகின்றது. அது தொடர்பாக இடைக்காலத் தடை உத்தரவு ஏதும் விதிக்கப்படவில்லை.

இலங்கைத் தீவிலே இரண்டு நிர்வாக மையங்கள் இருக்கின்றன. இரண்டு படைக்கட்டுமானங்கள் இருக்கின்றன. இரண்டு ஆள்புலக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் இருக்கின்றன என்பதையும் தமிழர் தாயகத்தில் இலங்கை அரசுக்கு வேறாக ஓர் அரசு முறை ஏற்பாடு செயற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதையும் உணர்ந்து ஏற்றுக்கொள்கிறது இந்த உடன்பாடு.

இலங்கை அரசமைப்பு வலியுறுத்தும் ஒற்றையாட்சியையும் ஆட்புல ஒருமையையும் இந்தப் புரிந்துணர்வு உடன்பாடு தூக்கி எறிந்து விடுகிறது என்பது சட்டம் படிக்காத சாதாரண பாமர மகனுக்கும்கூட எடுத்த எடுப்பிலேயே புரியக்கூடிய விடயம்.

ஆனால், இலங்கை அரசமைப்பைத் தூக்கிப்பிடிக்கும் இலங்கை நீதிமன்றங்கள் ஏதும் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இன்னும் நிராகரிக்கவில்லை. அதற்கு இடைக்காலத் தடை தன்னும் விதிக்கவுமில்லை.

இப்படி அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு முரணானது என அர்த்தம் பண்ணக்கூடிய இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கைத் தரப்பில் ஒப்பமிட்டவர் இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி அல்லர். அவரது இசைவின்றி - இன்னும் விளக்கமாகச் சொல்லப்போனால் அவரது விருப்புக்கு மாறாகவே - அதில் ஒப்பமிட்டவர் இலங்கைத் தீவின் பிரதமர்தான்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தாலாவது அவருக்கு எதிராக - அவரது செயற்பாடுகள் நடவடிக்கைகளுக்கு எதிராக - நீதிமன்றங்களில் வழக்குப்போடவோ, சட்ட நடவடிக்கை எடுக்கவோ முடியாது என்ற சிறப்பு சட்ட விலக்களிப்பு அவருக்கு இருப்பதால் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஜனாதிபதியின் செயலுக்கு எதிராக நீதிமன்றம் உத்தரவு ஏதும் கொடுக்க முடியாது என்று கூறலாம்.

ஆனால், அதுவும் அப்படி அல்ல, நீதிமன்றம் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும் விடயத்தில் நீதிமன்ற நியாயாதிக்கத்துக்குட்பட்டு, கட்டுப்பட வேண்டிய பிரதமரே இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒப்பமிட்டுள்ளார்.

ஆனால் ஐக்கியம், ஆட்புல ஒருமைப்பாடு, இறைமை என்று இலங்கைத் தீவின் அரசமைப்பின் அடிப்படை ஒழுங்கமைப்பையே கேள்விக்குள்ளாக்கும் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை, மேற்படி அடிப்படை ஒழுங்கமைப்புகளைப் பேணும் சட்ட உத்தரவுகளை விடுக்க வேண்டிய நீதிமன்றம் கண்டும் காணாமலும் இருப்பது ஏன்? அதை நீதிமன்றம் தடைசெய்து உத்தரவிடாமல் இருப்பது எதற்காக? எனக் கேள்வி எழுப்புகிறார் தமிழ்ச்செல்வன். தாமே அதற்குரிய பதிலையும் தருகிறார்.

"யுத்த நிறுத்தம் என்பது சிங்கள தேசத்துக்குத் தேவையானது. யுத்த நிறுத்தத்துக்கு ஒரு தடை கொண்டு வந்திருப்பார்களேயானால் சிங்கள தேசம் ஒரு பேரழிவைச் சந்தித்திருக்கும். அந்த அச்சம் காரணமாகவே அவர்கள் அதனைத் தடை செய்யவில்லை.

"சிங்கள தேசத்துக்கு எது தேவையானது, எது அவசியமானது என அவர்கள் நினைக்கிறார்களோ அதனை அவர்களின் சட்ட,நீதித்துறை உட்பட அனைத்தும் ஏற்றுக்கொள்ளும். ஆனால், தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்கின்ற விடயங்களை ஏதோ ஒன்றைக் காட்டித் தடுத்துவிடுவார்கள். அதுதான் பொதுக்கட்டமைப்பு விடயத்திலும் நடந்தது" - என்று சீற்றத்துடன் கூறியிருக்கிறார் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

இப்படி அவர் சுட்டிக்காட்டும் விடயங்கள் ஸ்ரீலங்காவின் நீதித்துறைச் சட்டங்கள் அனைத்தும் சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் நலன்களுக்கும், சிந்தனைகளுக்கும் ஏற்பவே செயற்படுகின்றன- என்ற அவரது குற்றச்சாட்டை உறுதிப்படுத்துவனவாகவே அமைந்துள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.

வெறும் சட்டத்துக்கு அப்பால் யதார்த்த நிலை கருதி, விளைவுகள் கருதி - யுத்த நிறுத்த ஏற்பாடுகளுக்கு வழிசெய்யும் புரிந்துணர்வு உடன்பாட்டை சாதகமான கண்கொண்டு நோக்குகின்றவர்கள், மக்களின் அவசர - அவசிய- மனிதாபிமானத் தேவையுடன் சம்பந்தப்படுகின்ற ஒரு பேரவல நிவாரணப் பிரச்சினையை மட்டும் வேறு கண்கொண்டு நோக்க முற்படுவது ஏன்?

'ஒரு கண்ணில் வெண்ணெய்; மறு கண்ணில் சுண்ணாம்பு' என்ற இந்தப் போக்கு எதற்காக? பேரினவாதப் பண்பின் வெளிப்பாடே இது என்று தமிழர்கள் குறைகூறுவதில் என்ன தவறு? இந்தப் போக்கு மாறும் என எதிர்பார்ப்பது நாய் வாலை நிமிர்த்தும் வேலையேயன்றி வேறில்லை.

# தமிழ்த்தினப் போட்டிப் பரிசளிப்பு நிகழ்வு விபுலானந்தர் நினைவுநாளில் நடப்பதில்லை!

## வழக்கம் கைவிடப்பட்டதால் தமிழ் ஆர்வலர் கவலை

அச்சுவேலி,ஜூலை28

தேசிய மட்டத் தமிழ்மொழித் தினப் போட்டியின் பரிசளிப்பு விழாவை விபுலானந்த அடிகளாரின் நினைவு தினமாகிய ஜூலை 19 ஆம் திகதி நடத்தும் வழக்கம் கைவிடப்பட்டமை குறித்து தமிழ் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முத்தமிழ் வித்தகர், முதல் தமிழ்ப் பேராசிரியர் விபுலானந்த அடிகளாரைக் கௌரவிக்கும் விதத்தில், கல்வி அமைச்சு தமிழ்மொழித்தினத் தேசிய மட்ட நிகழ்வுகளின் பரிசளிப்பு விழாவை அடிகளாரின் நினைவு நாளாகிய ஜூலை 19 ஆம் திகதி நடத்தவேண்டும் எனத் தீர்மானித்துள்ளது.

கல்வி அமைச்சின் தீர்மானத்தின்படி ஆண்டுதோறும் தமிழ்மொழித் தினம் தொடர்பான சுற்றறிக்கையில் தேசியமட்டப் பரிசளிப்பு விழாவை ஜூலை 19 ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்ற விதத்தில் காலவரையறை செய்து மாகாண, மாவட்ட, வலய, கோட்டபாடசாலைமட்டப் போட்டிகள் நடத்தப்பட்டு தமிழ்மொழித்தின விழா கொண்டாடப்பட வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கி வருகின்றது.

ஆனால், ஆரம்பகாலத்தில் உரிய முறையில் தேசிய மட்ட நிகழ்வு விபுலானந்தரின் நினைவுநாளில் பெருவிழாவாக நடைபெற்றது. ஆனால், கடந்த சில வருடங்களாக உரிய காலப்பகுதியில் நடைபெறாமல் காலம் தாழ்த்தி இழுத்தடிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

தமிழ்மொழி விருத்திக்காக நடத்தப்படும் மாணவர்களின் வாண்மை விருத்திக்கான தமிழ்ப் பெருவிழாவை முத்தமிழ் வித்தகரின் நினைவு நாளில் நடத்தி முடிக்க தமிழ் அதிகாரிகள் ஆர்வம் கொள்ளாமல் இருப்பது தொடர்பாக தமிழ் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ-11)

# வழிகாட்டலும் ஆலோசனையும் பாடத்துறைக்கு ஆலோசகர் தெரிவு

## ஞாயிறன்று யாழ்.வலயத்தில் நேர்முகப்பரீட்சை

அச்சுவேலி,ஜூலை28

'வழிகாட்டலும் ஆலோசனையும்' பாடத்துறைக்கான ஆசிரிய ஆலோசகர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, துணுக்காய், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய ஏழு கல்வி வலயங்களுக்குமான 'வழிகாட்டலும் ஆலோசனையும்' பாடத்துறைக்கான ஆசிரிய ஆலோசகர்களைத் தெரிவு செய்வதற்கான இந்த நேர்முகப் பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு வடக்கு-கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

'வழிகாட்டலும் ஆலோசனையும்' ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான ஆள்களைத் தெரிவு செய்வதற்காக ஜூன் மாதம் 26ஆம் திகதி நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்கள் உரிய நேரத்தில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க வேண்டும் என்று வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவைக்கு பொறுப்பான கல்விப்பணிப்பாளர் கே.முருகுப்பிள்ளை அறிவித்துள்ளார். (ஐ-11)

# அரச சட்டத்தரணி சமுகமளிக்காததால் ஆள்கொணர்வு விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாழ். மாவட்டத்தில் அரச படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பான ஆள்கொணர்வு மனுக்களில் மூன்று மனுக்கள் மீதான விசாரணைகள் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றன.

1996 ஆம் ஆண்டு ஜூன் மாத காலப் பகுதியில் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனவர்களான நாகமுத்து செல்வரட்ணம், யோகேஸ்வரன் சேரன், செல்லத்துரை நந்தகுமார் ஆகியோர் தொடர்பான மனுக்கள் மீதே விசாரணைகள் மேற்கொள்ளப்படவிருந்தன. எனினும், படைத்தரப்பில் ஆஜராக விருந்த அரச சட்டத்தரணி கொழும்பில் நடைபெறும் மிருசுவில் படுகொலை வழக்கில் சமுகமளித்திருந்தமையால், இம்மனுக்கள் மீதானவிசாரணைகள் அடுத்தமாதம் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

இந்த மனுக்களின் பிரதான எதிரியான முன்னாள் லான்ஸ் கோப்ரல் சோமரட்ண ராஜபக்ஷவின், சட்டத்தரணி ஆஜராகமாட்டார் என்ற காரணத்தால் அவர் இங்கிருந்து மீண்டும் கொழும்புக்கு அழைத்துச்செல்லப்பட்டார். அதனால், அவரும் விசாரணைகளுக்குச் சமுகமளிக்கவில்லை.

இந்த மனுக்களில் மனுதாரர் சார்பாக மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஆஜராகியிருந்தார். (ஐ-202-204)

# மேலும் 10 பேரின் ஆள்கொணர்வு மனு செப்ரெம்பரில் விசாரணைக்கு வரும்

யாழ்ப்பாணம்,ஜூலை28

குருநகர் பிரதேசத்தில் அரச படையினரால் கைது செய்யப்பட்டபின் காணாமற் போனோர் தொடர்பான 10 ஆள் கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12ஆம், 13 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இந்த விசாரணைகளுக்காக கிருஷாந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டவரும், காணாமற்போனோர் தொடர்பான ஆள்கொணர்வு மனுக்களின் பிரதான சாட்சியுமான முன்னாள் லான்ஸ் கோப்ரல் சோமரட்ண ராஜபக்ஷ மன்றில் ஆஜர் செய்யப்படுவார்.

மனுதாரர் சார்பில் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையச் சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஆஜராவார். (ஐ-202-204)

# நிஷாம் முத்தலிப் கொலையின் சூத்திரதாரிகள் அடையாளம் காணப்பட்டனர்; விரைவில் கைது!

## பொலீஸ்மா அதிபர் இப்படிக் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை28

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் கட்டளையிடும் அதிகாரி லெப்டினன்ட் கேணல் முத்தலிப்பின் கொலைச் சூத்திரதாரிகள் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. அவர்களை நாம் அடையாளம் கண்டிருக்கிறோம். விரைவில் கொலையாளிகள் கைது செய்யப்பட்டுவிடுவார்கள்.

இப்படிக் கூறினார் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ.

பொலீஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

'லெப்டினன்ட் கேணல் முத்தலிப்பைக் கொலை செய்வதற்காக உளவு பார்த்தவர்களில் இரண்டு சிங்களவர்களும் அடங்குவர். புலிகளுக்கு உளவு பார்ப்பதற்காக தெற்கில் பல சிங்களவர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். மறுபுறம் தனியார் நிறுவனங்களில் தொழில் பெற்று வேலை செய்யும் தமிழர்கள் பலரும் உளவு பார்ப்பதற்காக அமர்த்தப்பட்டுள்ளனர். வேலைசெய்யும் நிறுவனங்களின் அடையாள அட்டைகளைப் பயன்படுத்திக்கொண்டு உளவுபார்ப்பவர்கள் பற்றிய தகவல்கள் எமக்குக் கிடைத்து வருகின்றன' - என்றார்.

ஊடகவியலாளர் சிவராமின் கொலையின் சூத்திரதாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனரா? என்று பத்திரிகையாளர்கள் கேட்டனர். அதற்குப் பதிலளித்த பொலீஸ்மா அதிபர் -

'சிவராமைக் கொலைசெய்தவர்களை அடையாளம் கண்டிருக்கிறோம். அந்தக் கொலையாளிகளை பொலீஸார் நெருங்கிக் கொண்டிருக்கின்றனர் - என்றார். (க)

### உதயவாக்கு

அவன் என்னசெய்வான் என எண்ணுவதைவிட நீ என்னசெய்யப் போகிறாய் என சிந்திப்பதே மேல்.
-ஓர் அறிஞர்.

### நாளை

ஆடி 13
வெள்ளிக்கிழமை
29.07.2005
திதி: நவமி
பின்னிரவு: 02.02 வரை
நட்சத்திரம் : பரணி
முன்னிரவு : 06.53 வரை
சுபநேரம் : 06.03 - 07.32
ராகுகாலம்: 10.33 - 12.03
(யாவும் பழைய நேரப்படி)

## யாழ். போதனா வைத்தியசாலையில்

# மின்தூக்கி பொருத்தும் பணி ஓக. 15 இற்கு முன்னர் நிறைவு

## - நிர்வாக அலுவலர் தெரிவிப்பு -

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாழ். போதனா வைத்தியசாலையில் 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம் இலக்க நோயாளர் விடுதிகளுக்கான மின்தூக்கி பொருத்தும் பணி அடுத்தமாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுபெறும் என்று வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.பத்மநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள 80 லட்சம் ரூபா செலவில் மின்தூக்கி பொருத்தும் பணியினை இலங்கை மின்சாரசபையிடம் ஒப்பந்த அடிப்படையில் நாம் ஒப்படைத்துள்ளோம்.

தற்போது மின்தூக்கி பொருத்தப்பட்டு வருகின்றது. இப்பணியினை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்து எம்மிடம் கையளிப்பதாக மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர் - என்றார் அவர். (ஒ-13)

# GIT கருத்தரங்கு

**A/L 2006 மாணவர்களே உங்களுக்காகவே!**

நல்லூர் லயன்ஸ் கழக ஆதரவில் IBMS நடத்தும்

Institute of Business Management Studies IBMS

## இலவச கருத்தரங்கு

இடம் : யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபம்
காலம் : 31.07.2005 ஞாயிற்றுக்கிழமை
09.00 மணி முதல் 05.00 மணி வரை

**A/L 2006** மாணவர்களுக்கான **GIT** பரீட்சை நடைபெறவுள்ளது யாவரும் அறிந்ததே. இருப்பினும் மாணவர்கள் எவ்வளவு தூரம் பரீட்சைக்குத் தயாராக உள்ளார்கள் என்பது கேள்விக்குறியாகவுள்ளது. இந்நிலையில் யாழ். நகரில் முன்னணி வகித்துவரும் கணனி நிறுவனம் என்றவகையில் நாம் நல்லூர் லயன்ஸ் கழக ஆதரவில் முற்றிலும் இலவசமாக இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளோம். எதிர்காலத்தில் **GIT** சான்றிதழ் இன்றி தொழில்வாய்ப்போ அல்லது உயர்கல்வியோ பெற்றுக்கொள்வது கடினம் என்பது யாவரும் உணர்ந்ததே.

**GIT வல்லுநர்களின் உதவியுடன் மிகச் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட இக்கருத்தரங்கைத் தவற விடாதீர்கள் !!**

மேலதிக விபரங்களுக்கு :

**INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES (IBMS)**
# 410, K.K.S. ROAD, JAFFNA. T.P NO : 021 222 8232

ஊடக அனுசரணை: உதயன்



# Study in India

**இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து பட்டதாரியாக (Graduate) வாய்ப்பு**

**A/L சித்தியடைந்த மாணவர்களும், 2005 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்**

- Garden City College Affiliated to Bangalore University
- SSM College of Engineering affiliated to Anna Engineering University
- Muthayammal Art and Science College affiliated to Periyar University
- Bishop Heber College affiliated to Bharathidasan University

**Courses**

• B.E. Information Technology, • B.E. Computer Science and Engineering, • B.E. Electronics and Communication Engineering, • B.E. Mechanical Engineering, • B.Sc. Information Technology, • B.Sc. Computer Technology, • B.Sc. Apparel and Fashion Technology, • M.S.C. Information Technology • B.Sc. (Computer Science), • B.Sc. (Fashion & Apparel Design), • B.Sc. (Microbiology), • B.Sc. (Genetics), • B.Sc. (Biotechnology), • BCA. (Bachelor of Computer Applicants), • BBM. (Bachelor of Business Management), • BHM. (Bachelor of Hotel Management), • B.A. (Journalism), • B.Com (Computers) • B.Sc. Maths, • B.Sc. Phys • B.Sc. Electronics • B.Sc. Chemistry • B.Sc. Computer Science

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்திசெய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

எமது நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்விபயில்கின்றனர்.

- ஆண்கள் - பெண்களிற்கு தனியான விடுதி வசதிகள்
- Student Visa எமது நிறுவனத்தினால் செய்து கொடுக்கப்படும்
- கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தலாம்

2005ல் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் Pending Results உடன் இவ்வருடமே கல்லூரிகளில் சேர்ந்து பாடநெறிகளை தொடர முடியும். இதனால் மாணவர்கள் ஒரு வருடத்தை சேமிக்க முடியும்

அனேகமான கல்லூரிகள் யூலைமாதம் இரண்டாம் கிழமை தமது பாட நெறிகளை தொடக்கவிருப்பதால், உடனடியாக தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**MBBS** இலங்கை Medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட Crimea Medical Institute - University (Ukraine) இல் அனுமதி பெற்றுக்கொடுக்கப்படுகின்றது - A/L, O/L சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

மேலதிக விபரங்களுக்கு **Call 0777 - 767818 / (011) 4512591**

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, Colombo Plaza, 50 Galle Road, Colombo-06.

SKAds&Prints


### ஆலயத்தில் ஒலிபெருக்கிசாதனம் திருடப்பட்டது

நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஆலயத்தின் களஞ்சியஅறைக் கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் அங்கிருந்த ஒலிபெருக்கி சாதனங்களை அபகரித்துச் சென்றுள்ளனர் என்று முறையிடப்பட்டுள்ளது. (ஐ-17)

### கலந்துரையாடல்

யாழ்.நகர் கிழக்கு - வலயம் 1 சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபை அமைத்தல் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மரக்கன்றுகள் வழங்கல், பரிசில்கள் வழங்கல், விசேட உரைகள் என்பன இடம்பெறும். (8-204)

### விபத்தில் காயம்

மிருசுவிலில் நேற்று முன்தினம் நடைபெற்ற விபத்தில் படுகாயமடைந்த மிருசுவிலைச் சேர்ந்த மா. ஜெயக்குமார் (வயது 26), முகுந்தன் (வயது 23) ஆகிய இருவரும் யாழ்.மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். மோட்டார் சைக்கிளில்சென்றஇவர்களை வேகமாக வந்த லொறிஒன்று மோதியதாகக் கூறப்படுகிறது. (ஒ-13-ரி)


## ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

பண்டிதர் நரசிம்ம நாயுடு

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வருகைதந்துள்ளார் சர்வதேச ஜோதிடர். இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன் - மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்: (37907)

**பிள்ளையார் இன்** அறை என் 9, (26-14-15)
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9122836.



உ
சிவமயம்

## இந்தியப் பரம்பரை ஜோதிடர்

அருள்வாக்கு
**அம்பிகா அம்மா** அவர்கள்

*மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ளார்.*
கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்

- *ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும்*
- *திருமணப் பொருத்தம் பார்க்கப்படும்*

*அம்மாவைச் சந்திக்கும் இடம்:*
**அருள்வாக்கு அம்பிகா அம்மா**
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீமுருகன் ஜூவலர்ஸ்/லிங்கன் கூல்பார் அருகில்.

(38167)(26.14.15)


"ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமக"

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

| வையத்துள் அறிமுகம் | | தெய்வத்துள் சங்கமம் |
|---|---|---|
| 10 - 10 - 1925 |  | 08 - 08 - 2004 |

## அமரர் செல்லையா இராசரத்தினம்


திதி: 28.07.2005

*பாசத்தின் உறைவிடமாய் அன்பு காட்டி அரவணைத்த - எம் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களைப் பிரிந்து ஓர் ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு நீங்காது!*

உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்
அன்பு மனைவி திருமதி இ.பாலசரஸ்வதி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இராஜபவனம்,
சங்கானை.
(38205)(39-14-15-42)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
17 - 08 - 1938

மறைவு
28 - 06 - 2005

## அமரர் செல்லப்பா அப்பாப்பிள்ளை

வாழ வைத்த எம் தந்தை
வானகம் சென்றதனால்
கண்விழிகள் நீர் சுரக்க
கலங்கியே நாம் நிற்கின்றோம்
கனவு போல முப்பத்தொரு
நாள் கடந்து சென்றதுவோ?
அன்பான எங்கள் அப்பா
ஆண்டவனை வேண்டுகின்றோம்
ஆன்மசாந்தி நீ பெற்றே
இறை நிழலில் வாழ்ந்திடவே!

82/3, பருத்தித்துறை வீதி,
3ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்.

(38207) (39-14-15-42)

## வீதி புனரமைப்புக்கு ஏற்பாடு

வட்டக்கச்சி,ஜூலை28

வட்டக்கச்சி ஆஸ்பத்திரி வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் இவ்வீதி புனரமைப்புக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருத்தப்பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (8-405)

## சிலாவத்தை தமிழ் வித்தியாலயம் முதலாமிடம்

புதுக்குடியிருப்பு,ஜூலை28

முல்லைத்தீவு வலய மட்டத்திலான பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற சிறுவர் நாடகப் போட்டியில் சிலாவத்தை தமிழ் வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இப்போட்டியில் எட்டு நாடகங்கள் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது. (8-353)

## தற்காலிக காணி அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டன

வட்டக்கச்சி,ஜூலை28

வட்டக்கச்சி தமிழீழ நிர்வாக சேவையினரால் தற்காலிக காணி அனுமதிப்பத்திரங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

மாயவனூர் பகுதியில் 41 காணி உரிமையாளர்களுக்கும் மாவடிப் பகுதியில் 24 காணி உரிமையாளர்களுக்கும் இராமநாதபுரம் பகுதியில் 15காணி உரிமையாளர்களுக்கும் தற்காலிக காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. (8-405)

### புளியங்குளம் வைத்தியசாலையில்

# நோயாளர்கள் உரிய முறையில் கவனிக்கப்படுவதில்லை எனக் குற்றச்சாட்டு

புளியங்குளம்,ஜூலை28

புளியங்குளம் பிரதேச வைத்தியசாலையில் மருந்தெடுக்கச் செல்லும் நோயாளர்கள் உரியமுறையில் கவனிக்கப்படுவதில்லை என முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிகிச்சைபெறச் செல்கின்ற நோயாளர்களை அங்கு கடமைபுரியும் ஊழியர்கள் மரியாதையின்றி அழைப்பதாகவும் உரியநேரத்திற்கு வைத்தியசாலை திறப்பதில்லை எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நோயாளிகள் நீண்டநேரம் காத்திருந்த பின்னரே வைத்தியர் பார்வையிடுவதாகவும் மாலை நேரங்களில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் வைத்தியசாலை மூடப்படுவதால் நோயாளர்கள் பெரும் அவதியுறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வசதி வாய்ப்புகள் இன்றி பின்தங்கிய கிராமமாகக் காணப்படும் இப்பகுதியிலுள்ள வைத்தியசாலையின் ஊழியர்களினதும் வைத்தியர்களினதும் நடவடிக்கை குறித்து உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொதுமக்கள் கோருகின்றனர். (8-355)

# வட்டக்கச்சிப் பகுதியில் வீதி ஒழுங்கு நடவடிக்கை

### தமிழீழ காவல்துறை தீவிரப்படுத்தியுள்ளது

வட்டக்கச்சி,ஜூலை28

வட்டக்கச்சிப் பகுதியில் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளை காவல்துறையினர் தீவிரப் படுத்தியுள்ளனர்.

தமிழீழ காவல்துறையின் வட்டக்கச்சிப் பணிமனையினர் இந்த நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மை நாள்களாக மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்கள், இலக்கத் தகடுகள் அற்ற வாகனங்களைச் செலுத்துபவர்கள், மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேல் பயணம் செய்பவர்கள், உழவு இயந்திரத்தின் மட்காட்டில் இருந்து பயணம் செய்பவர்கள் ஆகியோர் இனங்காணப்பட்டு அவர்களிடம் தண்டப்பணம் அறவிடப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த நடவடிக்கை தொடர்ந்து தீவிரப் படுத்தப்படும் என தமிழீழ காவல்துறையின் வட்டக்கச்சிப் பணிமனை துணைப் பொறுப்பாளர் சி.புலேந்திரன் தெரிவித்தார். (8-405)

## உணவல்லாத பொருள்கள் வழங்கப்பட்டன

ஒட்டுசுட்டான்,ஜூலை28

வெளி மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தால் உணவல்லாத பொருள்கள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு கிராம அ[illegible]வலர் பிரிவிலும் தங்கி, எந்த உதவியும் வழங்கப்படாத நிலையில் உள்ள குடும்பங்களுக்கு உணவு அல்லாத பொருள்கள் க[illegible]ந்த 15ஆம் திகதி ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதன்முதற்கட்டமாகக் கூரைவிரிப்புகள் வழங்கப்பட்டன. அடுத்தகட்டமாக மேலும் பல பொருள்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-341)

## சிறப்புற நடந்த பிள்ளைகள் விழா

கிளிநொச்சி, ஜூலை28

தென்னிந்தியத் திருச்சபை வன்னிப் பிராந்தியத்தின் வருடாந்தப் பிள்ளைகள் விழா கடந்த சனிக்கிழமை முறிகண்டி தேவாலயத்தில் சிறப்புற நடைபெற்றது.

தென்னிந்தியத் திருச்சபையின் பிரதம பேராய ஆணையாளரும் வன்னிப் பிராந்திய குரு முதல்வரும் கிளிநொச்சி ஆலயக் குருவுமான வண.பிதா பி.ஆர். நவேந்திர அனுகூலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இறைசெய்தியை வண.பிதா ரி.ஜெயச்சந்திரன் வழங்கினார்.

நிகழ்வில் பிள்ளைகளின் குழுப்பாடல், தனிப்பாடல், வேதாகமப் புதிர்ப் போட்டிகள் என்பனவும் இடம்பெற்றன. (202)



இவ்வாண்டுக்கான தமிழ்த் தினப் போட்டியில் கிளி/பூநகரி ம.வி. மாணவர்களின் 'காத்தவராயன்' சிந்து நடைக்கூத்து கோட்ட, வலய மட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றது.

கூத்தில் பங்குபற்றிய மாணவர்கள், நாடகத்தை நெறியாள்கை செய்த ஆசிரியர்களுடன் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: பூநகரிச் செய்தியாளர்)*

# துணுக்காய் பிரதேசத்தில் பொதுநோக்கு மண்டபம் திறப்பு

துணுக்காய்,ஜூலை28

'நிக்கொட்'டின் நிதியுதவியுடன் துணுக்காய் பிரதேசத்தில் கிராம அபிவிருத்தி பொது நோக்கு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மண்டபத்தின் திறப்பு விழா கடந்த 25 ஆம் திகதி திங்கட்கிழமை துணுக்காய் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வி.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி எமில்டா சுகுமார், துணுக்காய் பிரதேச செயலர் நா.நந்தகுமார், 'நிக்கொட்' நிறுவன திட்டமிடல் பணிப்பாளர், காவல்துறை அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

(8-302-202)

## மதுபானச்சாலையை அகற்றக் கோரிக்கை

புளியங்குளம்,ஜூலை28

நெடுங்கேணிச் சந்தியில் அமைந்துள்ள மதுபானச்சாலையை அகற்றுமாறு நெடுங்கேணிப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் இரண்டுவருடத்திற்கு மேலாக இயங்கி வரும் இந்த மதுபானச்சாலையில் மது அருந்துவோர் தகாதவார்த்தைகளைப் பேசுவதுடன் வீதிப்போக்குவரத்திற்கும் இடையூறு விளைவிக்கின்றனர்.

இதனால், மாணவர்கள், பெண்கள் இப்பகுதியால் போக்குவரத்து மேற்கொள்ள அச்சப்படுகின்றனர்.

எனவே, இந்த மதுபானச்சாலையை குடியிருப்புகளுக்கு வெளியே இடம் மாற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-355)

## கருத்தூட்டல் நிகழ்வு

கிளிநொச்சி,ஜூலை28

போக்குவரத்து தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் கறுக்காய்குள ஆயப்பகுதி சோதனை நிலையத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட ஆயப்பகுதி பொறுப்பாளர் எழிலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கருத்துரையைத் தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் நிகழ்த்தினார்.

(8-305-202)

## கழிவகற்றலில் சிரமம்

புளியங்குளம்,ஜூலை28

மல்லாவிப் பகுதி பிரதேச சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரத்தை பிரதேச சபையினர் வேறு பணிகளுக்காகப் பயன்படுத்த வழங்குவதால் மல்லாவி சந்தை மற்றும் நகர்ப் பகுதியிலுள்ள கழிவுகளை அகற்ற முடியாதுள்ளதாக மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் கவலை தெரிவித்துள்ளனர். (8-355)




# முல்லைத்தீவு றோ.க. வித்தியாலய கொட்டகை தீயில் எரிந்து நாசம்!

புதுக்குடியிருப்பு,ஜூலை28

முல்லைத்தீவு அளம்பில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயக் கொட்டகை ஒன்று அண்மையில் தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

பாடசாலைக்கு அண்மையில் உள்ள காணி ஒன்றினைத் துப்புரவுசெய்து குப்பைகளுக்குத் தீயிட்டபோதே அந்தத் தீ பாடசாலைக் கொட்டகைக்கும் பரவி அது முற்றாக எரிந்து நாசமாகியதெனத் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாகப் பாடசாலை முதல்வர் தெரிவிக்கையில்-

சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான இந்தக் கொட்டகை முற்றாக எரிந்துள்ளது. சுமார் 465 மாணவர்கள் கல்வி கற்கும் இந்த வித்தியாலயத்தில் போதிய கட்டட வசதிகள் இல்லை. ஐந்து வகுப்புகள் இந்தக் கொட்டகையில்தான் நடைபெற்றன. அதுவும் எரிந்து நாசமானதால், மாணவர்கள் ஆலமர நிழலில் இருந்து கல்வி கற்கின்றார்கள் - என்றார். (8-353)

## கண்டெடுக்கப்பட்ட பொருள்கள்

புளியங்குளம் சோதனைச் சாவடியினூடாகப் போக்குவரத்தில் ஈடுபட்டவர்களால் தவறவிடப்பட்ட பயணப்பைகள், தேசிய அடையாள அட்டைகள் உட்படப் பல பொருள்கள் கண்டெடுக்கப்பட்டு, புளியங்குளம் தமிழீழ காவல்துறைப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதனை உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு புளியங்குளம் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (8-355)

## பொதுக் கிணறு வெட்டப்படுகிறது

வட்டக்கச்சி,ஜூலை28

வட்டக்கச்சி சிவிக் சென்ரர் பகுதியில் பொதுக்கிணறு ஒன்று வெட்டப்பட்டு வருகின்றது. வட்டக்கச்சி மேற்கு மாதர்சங்க வளாகத்தினுள் 'நியாப்' திட்டத்தின்கீழ் இந்தக் கிணறு அமைக்கப்படுகின்றது.

(8-405)







வட்டக்கச்சி, கட்சன் வீதியில் அமரர் பரஞ்சோதி மகேந்திரவதனன் ஞாபகார்த்தமாக அவரது சகோதரர் கலியுகவரதனால் அமைத்துக் கொடுக்கப்பட்ட அறிவாலயம், முன்பள்ளி ஆகியவற்றைக் கொண்ட கட்டடத் தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

கட்டடத் தொகுதியின் பிரதான நுழைவாயிலை தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கனும் அறிவாலய மண்டபத்தை ப.கலியுகவரதனும் மாவீரர் அர்ச்சனா முன்பள்ளி மண்டபத்தை மாவீரரின் சகோதரன் பொ. பத்மகாந்தனும் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதைப் படங்களில் காணலாம்.

*(படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)*



# விழிநீர் சொரிகின்றோம்

## நீ வந்து பிற ... மீண்டும்!

சுந்தர முகம் - நிலவு
சிரிக்கின்ற அழகு - கொள்ளை
பேசிப் பழகும் பண்பு - பணிவு - நீ
மயூரனடா...!
அதிர்ந்து பேசாதவனே -
அன்பால் அரவணைத்தவனே - வீடுமுன்
விபத்தொன்று உனக்கு விதியானது!
காலன் கூட உனைக் காயப்படுத்தவில்லை...!

உன் தம்பியரொடு -
ஐவராய் வாழ்ந்த வாழ்க்கை...
பெருவிரல் முறித்தானடா - காலன்
எழுதமுடியவில்லை... மிகுதி ...!

# சிவசுப்பிரமணியம் மயூரன்

பெற்றோர்க்கு கனவு கொடுத்தாய் -
தம்பியர்க்கு நம்பிக்கை நல்கினாய் -
நினைவில் நெற் பயிரென வளர்ந்தாய் -
கதிர்முற்றிப் புதிரெடுத்துக்
கைகளில் சேர்க்குமுன் -
கனவாகிப் போனாய் -
நினைவாகி வாழ்கிறாய் - !


நண்பனே...!
நீ போட நினைத்த -
மாலைகள் கழற்றி - உன்
மடியில் வைக்கிறோம் - மாசற்ற
மனதில் வாழ்த்துகிறோம் - நீ
வந்து பிற மீண்டும்
மணக்கோலம் காணவேண்டும் - நாம் ...!
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றென்றும் உன் நினைவுடன் :
ஆருயிர் நண்பர்கள்.

அன்னை மடியில்
28.11.1980

ஆண்டவன் அணைப்பில்
25.07.2005

# நான்காம் ஆண்டில் கால்பதித்துள்ள ஐ.பி.ஏ.எஸ்.நிறுவனம்



கணக்கியல் தொழில்சார் கற்கை நெறிகளுக்கான விரிவுரைகளை நடத்திவரும் ஐ.பி.ஏ.எஸ்.(IPAS-Institute of Professonal Accounting Studies) நிறுவனம் தனது மூன்றாவது அகவையை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து நான்காம் ஆண்டில் கால்பதிக்கின்றது.

15 வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் இலங்கை பட்டயக் கணக்காளர் கற்கை நெறி, இங்கிலாந்து பட்டய முகாமைக்கணக்காளர் கற்கைநெறி போன்ற தொழில்சார் கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் நடைபெற்றன. ஆனால், அவற்றின் செயற்பாடுகள் அனைத்தும் யுத்தம் காரணமாக இல்லாமல் போயின. இதனால், யாழ். மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் கல்விசார் கற்கை நெறிகளை (Academic Studies) கற்கக் கூடியதாக இருந்தது.

மேலும் கணக்கியல் தொழில்சார் கற்கை நெறிகளைக் கற்கவிரும்பும் மாணவர்கள் கொழும்பு சென்று பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியில் வாடகை வீடுகளிலும், விடுதிகளிலும் தங்கியிருந்து அதிகளவான பணத்தை விரையமாக்கி அக்கற்கை நெறியினைத் தொடர்ந்தார்கள்.

ஆனால், 2002 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட சமாதானச் சூழ்நிலை காரணமாக கொழும்பைத் தலைமை அலுவலகமாகக் கொண்ட பல நிறுவனங்கள் யாழ். மண்ணிலும் தமது சேவைகளை விஸ்தரித்தன. இப்பின்னணியில் யாழ். மாணவர் தமது சொந்த மண்ணில் கணக்கியல் தொழில்சார் கற்கைநெறிகளைக் கற்று உயர்ந்த பதவிகளில் கவர்ச்சிகரமான ஊதியத்துடன் வேலைவாய்ப்பினைப் பெற்று தான் வாழும் சமூகத்தினையும் உயர்த்திக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடன் 2002 ஆம் ஆண்டு மே மாதம் ஐ.பி.ஏ.எஸ். யாழ். மண்ணில் நிறுவப்பட்டது.

A/L பரீட்சையில் இரண்டு பாடங்களில் C சித்தியுடன் மூன்று பாடங்களில் சித்தியடைந்த மாணவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் கற்கைநெறியினைத் தொடரலாம். 2C சித்தி இல்லாதவர்கள் O/L இல் கணித பாடத்தில் அல்லது வர்த்தகமும் கணக்கியலும் பாடத்தில் C சித்தி இருப்பவர்கள் இக்கற்கை நெறியினைப் பயிலலாம். இதன் பரீட்சைகள் 6 மாதத்திற்கு ஒரு தடவை ஜனவரியிலும், யூலையிலும் நடத்தப்படுகின்றது. இவற்றின் பரீட்சைகள் முதல் நிலை, இடைநிலை, இறுதி நிலை I, II ஆகிய கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அனைத்துக் கட்டப் பரீட்சைகளிலும் சித்தியடைந்து பட்டயக் கணக்காளர் அல்லது தகுதி வாய்ந்த கணக்காளரின் கீழ் நான்கு வருடங்கள் பயிற்சியைப் பெற்று அனுபவச் சான்றிதழ் பெற்றவர்கள் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளலாம். O/L பரீட்சைகளில் 6 பாடங்களில் அல்லது A/L பரீட்சைகளில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் aat கற்கை நெறியினைத் தொடரலாம். O/L, A/L தகைமை இல்லாதவர்கள் கணக்கியல் மற்றும் கணக்காய்வுத் துறைகளில் 5 வருட அனுபவம் இருப்பின் இக் கற்கை நெறியினைப் பயிலலாம். இப்பரீட்சைகள் 6 மாதத்திற்கு ஒரு தடவை ஜூனிலும், டிசெம்பரிலும் நடத்தப்படுகின்றது. இவற்றின் பரீட்சைகள் முதல்நிலை, இடைநிலை, இறுதி நிலை ஆகிய கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கணக்காளர் ஒருவரின் கீழ் 2 வருடங்கள் பயிற்சியைப் பெற்று அனுபவச் சான்றிதழ் பெற்றவர்கள் இலங்கை கணக்கியல் தொழில் நுட்ப வல்லுநர் சங்கத்தின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்.பிரதான வீதியில் வசதிகளுடன் கூடிய விரிவுரை மண்டபத்தில் குறைந்த கட்டணத்தில் தகுதியான அனுபவம்மிக்க விரிவுரையாளர் குழாமினால் சிறிய நூலக வசதியுடன் ஐ.பி.ஏ.எஸ். நிறுவனத்தால் நடத்தப்படுகின்ற கணக்கியல் தொழில்சார் கற்கைநெறிகளுக்கான விரிவுரைகளில் இன்றே உங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள். ஐ.பி.ஏ.எஸ். இன் இடைவிடாத முயற்சியினால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் பரீட்சைகளை எழுதி நீங்களும் ஒரு பட்டயக் கணக்காளர் அல்லது கணக்கியல் தொழில் நுட்பவல்லுநராகி உங்கள் வாழ்வை வளமாக்குங்கள்.

# வணிக முகாமைத்துவ கற்கைநெறியை யாழ்ப்பாணத்தில் பயில வாய்ப்பு

ABE என்ற முதல் எழுத்துக்களுடன் ஆககப்பட்ட அசோஷியேசன் ஒவ் பிசினஸ் எக்சிகியூட்டிவ்ஸ் நிறுவனமானது 1973 இல் ஆரம்பிக்கப்பட்டு முப்பது வருடங்களுக்கு சற்று மேலான ஒரு குறுகிய காலத்தினுள் லண்டன் வணிக முகாமைத்துவ கல்வியில் முன்னணி நிறுவனமாகத் திகழ்கின்றது. ABE நிறுவனமானது நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் பிரதிநிதித்துவ அலுவல்களைக் கொண்டுள்ளதுடன் ஆயிரக்கணக்கான மாணவர்களைக் கொண்டுள்ள ஓர் உலக கீர்த்திபெற்ற நிறுவனமாகும். ABE கல்வித் திட்டமானது வணிக முகாமைத்துவத்தில் தொழில்புரிய விரும்புவோருக்கு, வணிக முகாமைத்துவ கல்வித் தகைமையின் பின்னர் அதற்கான கல்வி நெறிகளை கற்கக்கூடிய விதத்தில் அமைந்துள்ளது. ABE ஆனது பாடசாலையை




விட்டு விலகியோர் மற்றும் வணிக முகாமைத்துவத் துறையிலேயே தம்மை இணைக்க விரும்பும் மற்றைய தொழில்புரிவோர் போன்றோருக்கு சிறந்த கல்வியைக் கொடுத்ததனால், இது ஓர் நம்பிக்கைக்குரிய நிறுவனமாகக் கணிப்பிடப்பட்டு இதன் கீர்த்தி மென்மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இன்று உலகம் முழுவதிலும் உள்ள வணிகத் தலைவர்கள் ABE இன் கல்விநெறிகள் மிகச்சிறந்த கல்விநெறி என்றும் தமது வாக்கில் மீறாத நிறுவனமென்றும் உணர்ந்துள்ளார்கள்.

**விரைவும் செலவடக்கமுமானது**

இந் நிறுவனமானது லண்டன் வணிக முகாமைத்துவத்தில் கீர்த்தி பெற்றிருந்தாலும் இங்குள்ள கட்டண வீதங்கள் குறைவானவையே. ABE இன் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் எப்போதும் உலகம் முழுவதிலும் நூறாயிரக்கணக்கான மாணவர்களுக்கு அவர்களது வசதிக்கேற்ப தன்னை வைத்திருப்பதே. அது மட்டுமல்ல, ABE இன் தேர்ச்சியானது ஒரு தனி நபரால் மிகவிரைவில் பெறக்கூடிய தேர்ச்சியாகும். எமது நாடு இலங்கையைப் பொறுத்தமட்டில் ஒரு குறுகிய 18 மாத காலத்தினுள்ளேயே குறைந்த செலவான ஒரு லட்சத்து 47 ஆயிரம் ரூபாக்குள் அதன் படிப்பை நிவர்த்தி செய்யமுடியும்.

**மேற்படிப்புகள்**

ABE ஒரு சர்வதேச தகுதியாண்மையையும் பெற்றுக்கொடுக்கும். ஆகவே ABE ஐ அடிப்படையாகக் கொண்டு சர்வதேச உயர் கல்வியைத் தொடரமுடியுமென்பது இதிலிருந்து புலனாகிறது. இது முற்றிலும் உண்மை. உலகின் பல பல்கலைக்கழகங்கள் குறிப்பாக நோத்வூட் பல்கலைக்கழகம் (அமெரிக்கா), மேற்கு சிட்னி பல்கலைக்கழகம் (அவுஸ்திரேலியா), வேல்ஸ் பல்கலைக்கழகம் (லண்டன்), லைசெஸ்ரர் பல்கலைக்கழகம் (லண்டன்), மனிப்பால் பல்கலைக்கழகம் (இந்தியா) போன்றவை ABE தகுதியாண்மையை தமது BBA, MBA பரீட்சைகளுக்கு ஓர் அனுமதித் தகுதியாகக் கொண்டுள்ளன. நோத்வூட் (அமெரிக்கா) போன்ற பல்கலைக்கழகங்கள் ABE சான்றிதழ் உள்ளோருக்கு BBA கற்கை நெறிக்கு 3 வருடகால பாடவிலக்கு அளித்து 1 வருடத்திற்குள் மட்டுமே US வணிக பட்டப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வாய்ப்பளித்துள்ளது. வேறு பல பல்கலைக்கழகங்கள், மேலே குறிப்பிட்டவை அடங்கலாக, ABE சான்றிதழுடன் 2 வருட சான்றிதழின் பின்னரான முகாமைத்துவ அனுபவத்துடன் MBA பரீட்சைக்கு அனுமதிபெறுவதற்கான வாய்ப்பைக் கொடுத்துள்ளது. இது இரட்டை இனாம் அல்லவா!

**வேலைவாய்ப்பு**

ABE இற்கு உலகளாவிய கீர்த்தி உள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. மேலும எமது இலங்கை நாட்டிற்குள் உள்ள செலிங்கோ கொன்சலிடேற்றட் லிமிட்டட் போன்ற பிரசித்தமான நிறுவனங்கள் ABE சான்றிதழை முகாமைத்துவ தொழில் தேடுவோருக்கு அனுமதித் தகுதியாக ஏற்றுள்ளது. இறுதியாக ஒரு நபர் பெறுமதிமிக்க சர்வதேச வணிக முகாமைத்துவ சான்றிதழைப் பெறும் உத்வேகமானது ABE இன் தரத்தை உலகில் நிலைநாட்டியுள்ளது மல்லாது முன்னணி வீரனாகவும் திகழவைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இக்கற்கை நெறி தொடர்பான விவரங்களுக்கு:

Univentures Institute of Business Management, 55 Martin Road, Jaffna.

என்ற விலாசத்தில் பெறலாம்.

(3)



ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது கணவனை இழந்த திருமதி இ.கேசவனுக்கு கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனியின் மேற்பார்வையாளர் சு.சிவசுப்பிரமணியம் நஷ்டஈட்டு காசோலை வழங்குவதைப் படத்தில் காணலாம். படத்தில் காப்புறுதிக் கம்பனியின் விற்பனை அதிகாரி, காப்புறுதி முகவர்களும் காணப்படுகின்றனர். (3)

# ஒரே தரத்தில் உள்ள உள்ளூராட்சி அலுவலர்களிடையே நிலவும் சம்பள முரண்பாட்டை நீக்க ஆளுநருக்குக் கடிதம்

தென்மராட்சி,ஜூலை28

ஒரே தரத்தில் உள்ள உள்ளூராட்சி உத்தியோகத்தர்களுக்கு இருவேறுபட்ட சம்பள அளவுத் திட்டங்கள் உள்ளமை குறித்து மாகாண ஆளுநரிடம் முறையிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் வருமான மேற்பார்வையாளர்களே இந்த முறைப்பாட்டை செய்துள்ளனர்.

அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள் தொழில் சங்க ஒன்றிணைப்பு சம்மேளனம் மூலம் ஆளுநரிடம் கடிதம் மூலம் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்மேளனத்தினரால் ஆளுநருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் விவரம் வருமாறு:

வருமான மேற்பார்வையாளர் நியமனம் 1986 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொழும்பு உள்ளூராட்சி சேவைகள் திணைக்களத்தினால் வருமான மேற்பார்வையாளர் தரம்II இற்கு எழுதுநர் வகுப்பு II 'ஆ' வின் சம்பள அளவுத் திட்ட அடிப்படையில் வழங்கப்பட்டது.

பின்னர் மாகாண சபைகளினால் இந்த நியமனம் வழங்கப்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்ந்த மாகாணங்களில் வருமான மேற்பார்வையாளர் நியமனம் உரிய தர நிலையில் எழுதுநர் வகுப்பு II 'ஆ' சம்பள அளவுத் திட்டதின் அடிப்படையில் தற்போதும் வழங்கப்படுகிறது.

பொதுவாக உள்ளூராட்சி மன்றங்களில் நிரந்தரமாக சிற்றூழியர்களாகக் கடமையாற்றுகின்றவர்களில், சேவைக்காலம், கல்வித்தரநிலை, சேவைத்திறன் போன்றவற்றின் அடிப்படையில் பதவியுயர்வு சபைத் தீர்மானத்தின் மூலம் சிபார்சு செய்யப்படுகின்றவர்களுக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் நிரந்தர நியமனம் வழங்கப்படுகின்றது.

ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 1986 ஆம் ஆண்டின் பின்பு அந்தந்த உள்ளூராட்சி சபைகளினால் நியமனம் செய்யப்படுகின்ற வருமான மேற்பார்வையாளர்கள் சிற்றூழியர் தர நிலையிலான சம்பள அளவுத் திட்டத்திலும் உரிய தரநிலையற்ற விதத்திலும் உள்ளனர்.

அத்துடன், கொழும்பு உள்ளூராட்சி சேவைகள் திணைக்களத்தினால் 1986ஆம் ஆண்டுக்கு முன்பு நியமனம் செய்யப்பட்ட வருமான மேற்பார்வையாளர்களும் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றுகின்றனர். ஒரே பதவியில் உள்ளவர்களும் ஒரே கடமையை ஆற்றுபவர்களுமான வருமான மேற்பார்வையாளர்கள் இருவேறுபட்ட சம்பள அளவுத்திட்டத்தில் வேதனம் பெறுவது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் மாத்திரமே நடைமுறையில் உள்ளதாக அறிய முடிகிறது.

எனவே, வடக்கு - கிழக்கு மாகாண வருமான மேற்பார்வையாளர்களின் நியமன தரநிலை சம்பள அளவுத்திட்டம் தொடர்பான முரண்பாடுகளை நீக்கவும் இலங்கையில் ஏனைய மாகாணசபைகளில் வழங்கப்படுவது போன்று இவற்றை நடைமுறைப்படுத்தவும்,

அத்துடன், அதேபோன்று இவ் உத்தியோகத்தர்களுக்கு பிரயாணப்படி வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

(ஒ-117)


சூரியன் FM
மெகா Blast
எழுச்சியுடன் உயர்ந்து
7 ஆண்டுகள் நிறைவில்
எங்கள் சூரியக் கொண்டாட்டம்!
ஹற்றன் டன்பாரில்
30ஆம் திகதி இரவு 8மணிக்கு
சூரியன் Mega Blast!
சூரியன் Mega Blast!
• டிப்பு • ஹரிணி
• மாணிக்கவிநாயகம்
• மாலதி லக்ஷ்மன்
எம். சிவக்குமாரின்
அக்னி யின் இசையில்
சூரியன் Mega Blast!
டிப்பு
ஹரிணி
மாணிக்கவிநாயகம்
மாலதி லக்ஷ்மன்
சந்தோஷம்!
பிரமாண்டம்!
இலவசம்!
என்றும் நம்பர் 1!
103.2FM 97.3FM
97.9FM 93.0FM
ABC

# மொழியின் வாழ்வோடுதான் இனத்தின் வாழ்வும் பின்னிப் பிணைந்திருக்கிறது

## கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலய தமிழ்த்தின விழாவில் ஈழவேந்தன்



ஒருமொழியின் வாழ்வோடுதான் ஒரு இனத்தின் வாழ்வும் பின்னிப் பிணைந்து நிற்கின்றது. மொழி அழிக்கப்படும் போது அம் மொழி இனமும் அழிக்கப்படுகின்றது.

- இவ்வாறு கூறினார் யாழ்ப்பாணத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன்.

கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழாவில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு ஈழவேந்தன் உரை நிகழ்த்தினார். கல்லூரி முதல்வர் திருமதி சிவபாலன் தலைமையில் நடைபெற்ற விழாவில் ஈழவேந்தன் தொடர்ந்து பேசியதாவது:-

மொழி ஓர் இனத்தின் வாழ்வோடு பின்னிப்பிணைந்த ஒன்று. ஒரு மொழி வாழ்கின்றபோது மொழி பேசுகின்ற இனம் வாழ்கின்றது. அம்மொழி அழிக்கப்படும்போது அவ்வினமும் அழிக்கப்படுகின்றது. 'தமிழுக்கு அமுதென்று பேர் அந்த தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என பாரதிதாசன் பாடிய பாடல் எம்மை வெறுமனே உணச்சியூட்டுவதற்காகப் பாடப்பட்ட பாடல் அல்ல. மாறாக மொழியின் வாழ்வோடுதான் ஒரு இனத்தின் வாழ்வு பின்னிப்பிணைந்துள்ளது என எடுத்துக்காட்டும் முறையில்தான் இப்பாடல் அமைந்துள்ளது. உயிர் அழிகின்றபோது உடல் பிணமாக மாறுவதுபோல் மொழி அழிகின்றபோது அந்த மொழியைப் பேசுகின்ற இனமும் தன் அடையாளத்தை இழந்து அழிந்துபோவது தவிர்க்கமுடியாத நிகழ்ச்சியாகும். நீர்கொழும்பு தொட்டு சிலாபம் வரையில் இயங்கிய 150 தமிழ் பாடசாலைகளுக்கு மூடுவிழா நடத்தியதன் விளைவு வடமேல் மாகாணம் முழுவதும் 50 ஆண்டுகள் இடைவெளியில் தமிழினம் சிங்கள இனமாக மாற்றப்பட்டுள்ளது.

அமைச்சர் பெர்ணான்டோ புள்ளே சொன்னது.... இனச்சீரழிவிற்கும் இனமாற்றத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்குபவர் அமைச்சர் பெர்ணான்டோபுள்ளே. அவர் என்னுடன் மனம் திறந்து பலவற்றைப் பேசுபவர். அவற்றுள் நினைவுகொள்ளவேண்டியது ஒரேயொரு விடயந்தான் "என் தந்தையுடன் நான் நல்ல தமிழில் பேசுகின்றேன். ஆனால், என் மகளோடு சிங்களத்தில் பேசுகின்றேன். அவளை என் மகளே என அழைக்க நான் விரும்புகிறேன். மகளே என அழைக்கும்போது ஏற்படும் என் உள்ளுணர்வு தனித்தன்மையுடையது. ஆனால், நான் சூழ்நிலையின் கைதியாக மாறி அவளுக்குத் தமிழ் புரியாத நிலையில் அவளை 'துவ' என சிங்களத்தில் அழைக்கின்றேன்". என்ற பெர்னாண்டோ புள்ளேயின் கூற்றைச் செவிமடுத்தபோது, உங்கள் மொழியை நீங்கள் கைவிட்டதன் காரணமாக 2 தலைமுறைக்கிடையில் நீங்கள் சிங்களவராகக் கணிக்கப்படுகிறீர்களே. உங்கள் தனித்துவத்தை - தேசியத்தை நீங்கள் இழந்துவிட்டீர்களே ஓர் அடையாளமற்ற நிலையில் அல்லவா நீங்கள் வாழ்கிறீர்கள் எனக் கூறியபோது, நீங் கள் சொல்வது உண்மைதான் நான் என்ன செய்ய எனக் கண்கலங்கிய நிலையில் அவர் பதிலளித்தார்.

இன்று மலையகத்தின் பல பகுதிகளில் தமிழ் பாடசாலைகள் மெல்லமெல்ல மூடப்படுகின்றன. சில தமிழ் பாடசாலைகளின் முதல்வராகச் சிங்களவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கல்லூரி நிர்வாகம் சிங்கள மயமாக்கப்பட்டுள்ளது. தமிழ் வகுப்புகள் நடைபெறுகின்ற இடங்களில் சிங்கள வகுப்புகள் இன்று நடைபெறுகின்றன. மலையகத்தை வழிநடத்துகின்ற தமிழ்த் தலைவர்கள் தடம்புரண்ட நிலையில், மலையகம் காலப்போக்கில் சிங்கள மயமாக மாறினாலும் வியப்பல்ல. அண்மையில் திருமலை சென்றபோது, தமிழ் பாடசாலைகள் பலவற்றிற்குச் சென்றேன். தமிழ் ஆசிரியர்கள் இல்லையென்று பாடசாலை முதல்வர்கள் முறையிட்டுள்ளனர்.

திருகோணமலையை சிங்களமயமாக்கும் சதி முயற்சியில் இதுவும் ஒன்றென உணர்கின்றோம். இக் கொடுமையைக் கண்டித்து பல கூட்டங்களில் பேசியுள்ளேன். அறிக்கைகளும் விடுத்துள்ளேன். ஆனால், பிறந்து வளர்ந்த யாழ்ப்பாணத்தில் என் பிறப்பிடமான கொழும்புத்துறையில் நான் பயின்ற இந்து மகா வித்தியாலயத்தில் ஓர் ஆண்டாக தமிழ் பாட ஆசிரியர் இல்லையென்று அறிந்தபொழுது, வியப்பில் மூழ்கினேன். வெட்கித் தலை குனிந்தேன் . ஏன் இதனை எனக்கு அறியத் தரவில்லை? என தலைமை ஆசிரியையரைக் கேட்டபோது தந்த பதில் தெளிவினைத்தரவில்லை. மாறாக அது மேலும் குழப்பத்திற்குள்ளாக்கியது.

உங்கள் உரிமையை நீங்கள் நிலைநாட்ட ஏன் தயங்குகின்றீர்கள்? ஏன் நாடாளுமன்ற உறுப்பினரான எனக்கு அறியத்தரவில்லை? எனக் கேட்டபோது அதிபர் புன்முறுவல் பூத்தாரேயன்றி, பதில்தரவில்லை எனக் குறிப்பிட்டார்.

உடுவில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் உரைநிகழ்த்திய போது, இன்றைய தமிழ் மாணவர் உலகம் படிப்பில் கவனம் செலுத்தாது திசைமாறிச் செல்வது கவலைக்குரியது. இந்தச் சீரழிவைத் தடுக்கின்ற முறையில், இளம் சமுதாயத்தை வழிநடத்தவேண்டியது ஆசிரியர்களின் கடமை என்று குறிப்பிட்டார்.

(ப)

# கலை இலக்கிய ஆர்வத்தினை இளைய தலைமுறையினரிடம் ஏற்படுத்த வேண்டும்

## வவுனியா வளாக முதல்வர் பேராசிரியை ஆர்.மகேஸ்வரன்

வவுனியா,ஜூலை28

'இன்று இளந்தலைமுறை மாணவரிடம் குறிக்கோளற்ற போக்கு தென்படுகிறது.

அவர்கள் மத்தியில் கலை இலக்கிய ஆர்வத்தினை ஏற்படுத்துவதன் மூலம் சமூக அக்கறையுள்ள மாணவர்களாக, பொறுப்புள்ள தலைமுறையினராக மாற்றமுடியும். இலக்கியப் போட்டிகள் நடத்துவதன் மூலம் இந்த ஆர்வத்தினை மேலும் வளர்க்கமுடியும்.

மேற்கண்டவாறு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் எட்டாண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய வவுனியா வளாக முதல்வர் பேராசிரியை ஆர். மகேஸ்வரன் தெரிவித்தார்.

இரு முதுபெரும் இலக்கியகர்த்தாக்களுக்கு விருதுகளை வழங்கி உரையாற்றிய பேராசிரியர். இலக்கியச்சேவை புரியும் பெரியவர்களைப் பராட்டுவதோடு அவர்களைப் போன்று புதிய தலைமுறையினர் உருவாகவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை முன்னாள் பிரதி அதிபரும், இசை விரிவுரையாளருமாகிய கலைமாமணி பொன்.தெய்வேந்திரம் மற்றும் ஓய்வுபெற்ற கிராம சேவையாளரும் சமய இலக்கியங்கள் படைத்துவருபவருமாகிய கண்டாவளைக் கவிராயர் சி.கு. இராசையா ஆகிய இருவருக்கும் 'இலக்கியச் செல்வர்' எனும் விருது வழங்கிக் கௌரவித்தனர் வவுனியா கலை இலக்கிய வட்டத்தினர்.

வட்டத்தின் சஞ்சிகையான 'மாருதம்' - (இதழ் ஆறு) வவுனியா கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேர்னாட் அவர்களினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. நிகழ்வின் சிறப்பு அம்சமாக தமிழ்மணி அகளங்கன் எழுதிய 'பாஞ்சாலி சபதம்' எனும் நாட்டிய நாடகம் நிருத்தியவாணி திருமதி வீ.சூரியயாழினி அவர்களின் நட்டுவாங்கத்தில் வவுனியா நிருத்திய நிகேதன கலாமன்ற மாணவிகளினால் அரங்கேற்றப்பட்டது. வவுனியா நர்த்தனாஞ்சலி நாட்டியப்பள்ளியினர் வழங்கிய 'வன்னி அருவி' பாடல்களுக்கான நடன நிகழ்வும் இடம்பெற்றது.

(ப)




# காலத்தின் தேவைக்கேற்ப கல்வியை ஊக்குவித்துவரும் யாழ்ப்பாணக் கல்லூரி

## முன்னாள் அதிபர் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாழ்ப்பாணக் கல்லூரி காலத்தின் தேவைக்கு ஏற்ப சகல மாணவர்களையும் கல்வியில் மட்டுமன்றி புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளவும் ஊக்கமளிக்கின்றது. அதற்கேற்ப மாணவ சமுதாயத்தை உருவாக்கி வருவது மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

- இவ்வாறு யாழ்ப்பாணக் கல்லூரி முன்னாள் அதிபர் ஜி.இராஜநாயகம் கூறினார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் கல்லூரி அதிபர் றோயல்.ஏ.விமலேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் ஜி.இராஜநாயகம் தொடர்ந்து பேசுகையில்:-

யாழ்ப்பாணக் கல்லூரி 1958 இல் இருந்து பட்டதாரிப் பிரிவினை ஆரம்பித்தது.

கலை, வர்த்தக மற்றும் விஞ்ஞானத் துறைகளில் பட்டதாரிகள் பிரிவு ஊடாக ஆளுமை மிக்க பட்டதாரிகளை உருவாக்கி பிரதேச வளர்ச்சிக்கும் நல்லாட்சிக்கும் உதவி வருகின்றது.

அத்துடன் கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளின் நிதி உதவியுடன் வறிய மாணவர்களின் கல்வி, கலை, கலாசாரம் மற்றும் விளையாட்டுக்கு ஊக்குவிப்பதுடன் - ஒவ்வொரு துறையிலும் சிறந்த சிற்பிகளை உருவாக்கி வருகின்றது.

யாழ்ப்பாணக் கல்லூரியின் கல்வி வரலாற்றில் தடம் பொறித்தவர்கள் இன்று உலகளாவிய ரீதியில் தலைசிறந்த நிர்வாகிக்ளாகவும், நீதிபதிகளாகவும், சட்டத்தரணிகளாகவும், டாக்டர்களாகவும், பொறியியலாளர்களாகவும் மற்றும் பிறதுறை விற்பன்னர்களாகவும் இருப்பதை தனது கண்களூடாக பார்த்து மகிழ்ந்துள்ளேன் - என்றார்.

ஆரம்ப பாடசாலை மாணவத் தலைவி காஞ்சனா செந்தில்நாதன் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

தங்கப்பதக்க விருது பெற்ற மாணவர்களான பி.குலராஜ் ஆங்கிலத்திலும், செல்வி எஸ்.சாருஜா தமிழிலும் விசேட சொற்பொழிவு ஆற்றினார்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் ஏ.விமலேந்திரன் பேசுகையில்;

யாழ்ப்பாணக் கல்லூரிக்கு காலடி எடுத்து வைத்து கல்வியை ஆரம்பிக்கும் சகல மாணவர்களின் துறைகளுக்கு ஏற்ப கல்வியையும் சிந்தனைத் திறனையும் வளர்க்கவே எமது கல்லூரி ஆசிரியர் குழாம் இரவு - பகலாக கஷ்டப்படுகின்றது என்றார்.

சந்திரா இராஜநாயகம் பரிசில்களையும், விருதுகளையும், கிண்ணங்களையும் வழங்கி கௌரவித்தார்.

சிரேஷ்ட மாணவர்களுக்கான பரிசில்கள் உப அதிபர் திருமதி இந்திராணி ஜெயக்குமார் தலைமையிலும் -

கனிஷ்ட மாணவர்களுக்கான பரிசில்கள் சிரேஷ்ட ஆசிரியர் அன்னப்பா ஜெயராஜன் தலைமையிலும் -

ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்கள் ஆரம்ப பாடசாலை மேற்பார்வையாளர் வண.ஜி.நடராஜா தலைமையிலும் வழங்கப்பட்டன.

(ப-85)

# குழந்தையின் எதிர்காலக் கல்வியை நிர்ணயிப்பது பாலர் பாடசாலை

கோண்டாவில்,ஜூலை28



ஒரு குழந்தை தனது கல்விப் பாதையில் முதலாவது அடியைப் பாலர் பாடசாலை ஒன்றிலேயே எடுத்து வைக்கின்றது. அது எடுத்தஎடுப்பிலேயே வெற்றிகரமாகிப் பதிந்து விடுமானால் கல்வியில் குழந்தையின் எதிர்காலமும் சிறப்பாக அமைந்து விடும் என்பதில் ஐயமில்லை.

கோண்டாவில் விக்கினேஸ்வரா பாலர் பாடசாலையின் பதின்மூன்றாவது வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மூத்த பத்திரிகையாளர் லயன் செல்லப்பா நடராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் பாலர் பாடசாலை ஆசிரியை திருமதி ஸ்ரீதரன் சிவானந்தராணி தலைமையில் இடம்பெற்ற இவ் நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

குழந்தைகளுக்கு இருக்கக் கூடிய பயத்தை முதலில் பாலர் பாடசாலைகள் நீக்கவேண்டும். படிப்பென்றால் பயப்படும் தன்மையை அவர்களிடம் இல்லாமல் செய்தல் அவசியம். குழந்தைகள் தாமாகச் சிரித்த முகத்துடன் செல்லக் கூடியவாறு பாலர் பாடசாலைகள் அவர்களை உற்சாகப்படுத்தி அரவணைக்கும் நிலை முக்கியமானது. குழந்தைகள் பாலர் பாடசாலைகளில் எவ்வளவு இரசனையுடன் குட்டிக்கதைகளைக் கேட்கிறார்களோ அதுவே அவர்களைப் பிற்காலத்தில் நல்ல வாசிப்புப் பழக்கமுள்ளவர்களாக ஆக்கிவிடும். படிப்பென்றால் கசப்பல்ல இனிப்பு என்ற உணர்வு பாலர் பாடசாலைகளில் முதலில் பாலர்களுக்கு ஊட்டப்படுவதும் இன்றியமையாததாகும். படங்களுக்கு வர்ணம் தீட்டுவது குழந்தைகளுக்கு மிக மிக விருப்பமான ஒன்றாகும். அதேபோல விளையாட்டுக்களிலும் அவர்களுக்கு நாட்டம் அதிகம். இத்தகைய செயற்பாடுகள் மூலம் குழந்தைகளைக் கவர்ந்து அவர்கள் கசப்பு என்று கருதாதபடி கல்விப் போதனைகளையும் மேற்கொள்ளலாம். பாலர் பாடசாலை ஆசிரியைகளின் பணிமிகவும் கடினமானதாகும். உயர்தர வகுப்பு மாணவர்களுக்குப் பாடப்போதனை போலன்றி மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே ஆசிரியைகள் குழந்தைகளுக்குக் கல்வியைக் கற்பிக்கிறார்கள். அவர்களது பணி மகத்தானது. எந்த ஒரு குழந்தையும் பாலர் பாடசாலையில் தனது முதலாவது அடியை வெற்றிகரமாக எடுத்து வைத்துவிட்டால், அது தொடர்ந்து தனது முன்னேற்றப்பாதையில் சென்றுகொண்டே இருக்கும் எனபதில் ஐயமில்லை- என்றார்.

விளையாட்டு விழாவில் குழந்தைகள் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அனைவரையும் கவர்ந்தனர்.

கோண்டாவில் இந்து மகாவித்தியாலய பதில் அதிபர் திரு.இ.அருணகிரிவாசன் உட்படப் பலர் விழாவில் உரையாற்றினர்.

(ப)

**இயந்திர மூலம் குழாய்க்கிணறு அமைத்தல்**

இயந்திர மூலம் 6" விட்டமான குழாய்க்கிணறு 3 மணித்தியாலத்தில் அமைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

ந. பாலகிருஷ்ணன்
கலைவாணி மில் ஒழுங்கை
(Farm School Lane),
கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.
T.P:- 0777290266, 0777512943
(36937) (54-



**ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்**

இந்தியாவிலிருந்து வந்துள்ள
ஸ்ரீ ராமகிருஸ்ண சாஸ்திரிகள்
ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்
கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

**அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,**
இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி),
யாழ்ப்பாணம். T.P.: 021 2225680, 0776627373. (38144) (36.14.10)



**M.A.காமராஜர் பல்கலைக்கழகம்**
**(மதுரை)**

- மேற்குறிப்பிடப்பட்ட பட்டப் பாடநெறிக்குரிய விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.
- பதிவுகள் மேற்கொள்வதற்கான விண்ணப்பமுடிவு திகதி 05-08-2005
- சகல பாடங்களுக்குமான விரிவுரைகள் ஆரம்பம் 30-07-2005 (2மணி)

காமராஜர் யாழ்.இணைப்பாளர்
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(38185)(26.14.15)



S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

**தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்**



Rediffusion | DYR 497/11/04

**எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்த தவறாதீர்கள்**

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீர்க்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-Lon
என்றும் முன்னணியில்

S-Lon இல்லம்
நிம்மதியான வாழ்வுக்கு

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுரூக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741


## மாணவன் சுட்டு சிப்பாய் மரணம்!

திருகோணமலை, ஜூலை 28

திருகோணமலை, வில்கம் விகாரைக்குச் சமீபமாகவுள்ள காவலரணில் கடமையிலிருந்த சிப்பாய் ஒருவர் சிங்களப் பாடசாலையில் கல்விபயிலும் 15 வயது மாணவன் ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்றது.

இராணுவக் காவலரணினுள் தந்திரமாக நுழைந்து ரி-56 ரக துப்பாக்கியை எடுத்துக்கொண்டு குறிப்பிட்ட சிறுவன் ஓடியுள்ளான். இதனைக் கண்ட சிப்பாய் சம்பந்தப்பட்ட சிறுவனை மறித்து துப்பாக்கியைப்பெற முயற்சித்தார் என்றும் - அப்போது சிப்பாய் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு சிறுவன் தப்பியோடிவிட்டான் என்றும் - கூறப்பட்டது.

தனது சகோதரனுடன் சண்டை பிடித்த குறிப்பிட்ட சிறுவன், சகோதரனை வெட்டப் போவதாகப் பயமுறுத்திவிட்டு வீட்டை விட்டு வெளியேறியதாக ஒரு தகவல் தெரிவித்தது. (எ-84)

## ஆசிரிய சேவை உள்ளீர்ப்பு தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 28

ஆசிரிய சேவை உள்ளீர்ப்பு, பதவி உயர்வு மறுசீரமைப்பு சுற்றறிக்கை தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையினால் நடத்தப்படும். இக்கருத்தரங்கில் பாதிக்கப்பட்டவர்கள் தமது தேவைகளை இரண்டு பிரதிகளில் எழுதிச் சமர்ப்பிக்கமுடியும்.

இந்தக் கருத்தரங்கில் சகல ஆசிரியர்களையும் பங்குபற்றித் தேவையான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டச் செயலாளர் க.பாலச்சந்திரன் கேட்டுள்ளார். (எ-13)

## மரத்திலிருந்து வீழ்ந்து இரண்டுபேர் காயம்!

தென்மராட்சி, ஜூலை 28

இருவேறு இடங்களில் மரத்திலிருந்து தவறி வீழ்ந்த இருவர் காயமடைந்தனர்.

சாவகச்சேரியில் வெவ்வேறு இடங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவங்களில் -

சாவகச்சேரி தபால் நிலைய வீதியைச் சேர்ந்த பரமேஸ்வரன் ஆனந்தசேகர் (வயது- 15) -

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் சாவகச்சேரியில் வசிப்பவருமான சுந்தரம் ஜீவராஜ் (வயது -19) -

ஆகியோரே காயமடைந்தனர். இவர்கள் இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஓ-117)

## சட்டவிரோதமாக மின் பெற்றவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

ஊர்காவற்றுறை மற்றும் வேலணைப் பிரதேசங்களில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட 5 பேருக்கு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம் 35 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

வேலணை மின் அத்தியட்சகர் தலைமையிலான குழுவினர் ஊர்காவற்றுறைப் பொலீஸாரின் உதவியுடன் கடந்த 24 ஆம் திகதி இரவு ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பிரதேசங்களில் திடீர் சோதனை நடத்தினர்.

அதன்போது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுப் பயன்படுத்திய குற்றச்சாட்டின்போரில் 5 பேரைப் பொலீஸார் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கடந்த 25 ஆம் திகதி ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர். அவர்களில் இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும் மூவருக்குத் தலா 5 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது.

(8-202)


ஆடி மாத அதிரடி மலிவு விற்பனை
25% வரை விலைக்கழிவு
OCEANICK IMPEX
192, MAIN STREET, COLOMBO 11.
Tel: 2336720, 2327168, Wholesale: 2384131, Fax; 2326961
E.mail: oceanick192@yahoo.com

## மாங்காய் வீழ்ந்து கண்ணில் காயம்!

தென்மராட்சி,ஜூலை28

மாமரத்தின் கீழ் படுத்திருந்தவரின் கண் மீது மாங்காய் வீழ்ந்தது.

கடந்த திங்கட்கிழமை இச்சம்பவம் மிருசுவில் தவசிக்குளத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை இராசமலர் (வயது-50) என்பவர் இதில் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-117)

## ஆழிப்பேரலையால் பாதிப்புற்றோருக்கு கனேடியத் தமிழர் அமைப்பு உதவிக்கரம்

தென்மராட்சி,ஜூலை28

கனடாவில் செயற்படும் இலங்கைத் தமிழர் ஒன்றியம் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மணற்காட்டைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கவுள்ளது.

சகல வசதிகளையும் கொண்டனவாக தலா 7 லட்சம் ரூபா செலவில் இவ்வீடுகள் அமைக் கப்படவுள்ளன.

வீடுகள் அமைக்கப்படவுள்ள பகுதியை மாதிரிக் கிராமமாக அமைக்கவும் -

மின்சார வசதி, வீதி ,கிணறு, மலசலகூடம் ஆகியவற்றை உள்ளடக்கி வீடுகளை நிர்மாணிக்கவும் - திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இருவர் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஊடாக யாழ்.அரச அதிபரை யாழ். செயலகத்தில் அண்மையில் சந்தித்துப் பேசினர்.

இத்திட்டம் அமைக்கப்படவுள்ள இடத்தினைத் தெரிவுசெய்துதருமாறு அரச அதிபரை அவர்கள் கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## பனை வீழ்ந்ததில் பசுமாடு மரணம்!

தென்மராட்சி,ஜூலை28

பலத்த காற்று வீசியபோது பனை மரம் முறிந்து அப்பகுதியில் புல்மேய்ந்து கொண்டிருந்த பசுமாட்டின்மீது வீழ்ந்தது. இதனால், பசுமாடு உயிரிழந்தது.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை, புலோலி மேற்கில் இடம் பெற்றது.

அப்பகுதியைச் சேர்ந்த க.இராமச்சந்திரன் என்பவரின் பசுமாடே பலியானதாகும். (ஒ-117)




## கூட்டுறவு விழா மாதம் குடாநாட்டில் அனுஷ்டிப்பு

அரியாலை ஜூலை28

குடாநாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புகள் இணைந்து 83 ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழாவை அனுஷ்டித்து வருகின்றன.

கூட்டுறவுச் சங்கக் கட்டடங்களிலும் வாகனங்களிலும் கூட்டுறவுக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

சங்கவாகனங்கள், பொதுஇடங்கள், வைத்தியசாலைகள் போன்றவற்றில் கூட்டுறவாளர்கள் ஒன்றிணைந்து சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கூட்டுறவாளர் தினவிழா கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகியது.

எதிர்வரும் 30ஆம் திகதி கூட்டுறவாளர் பேராளர் மாநாட்டுடனும், 31ஆம் திகதி கூட்டுறவாளர் எழுச்சிப் பேரணியுடனும் விழா நிறைவுபெறும். (ஐ-17)




*வட பிரதேச நல்லொழுக்கச் சம்மேளனம் சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நவாலி வை.எம்.சி.ஏ மண்டபத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை அண்மையில் நடத்தியது.இதில் நவாலி வை.எம்.சி.ஏ நடத்திவரும் கல்வி நிலையத்தில் ஆண்டு ஐந்துபுலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு வழங்குவதற்கான கல்வி உபகரணங்கள் அடங்கிய பொதியை சம்மேளனத்தின் செயலாளர் செ.குமாரசிங்கம், வை.எம்.சி.ஏ யின் செயலாளர் இ.அருள் றோகனிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.*

*(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

## யாழ்.கூட்டுறவு எரிபொருள் நிலைய கட்டடப் பணி மீண்டும் ஆரம்பம்

அரியாலை,ஜூலை28

யாழ்.முற்றவெளியில் அமைந்திருக்கும் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலைய கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிதாகவும் நவீன வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டு வரும் இந்தக் கட்டடத்தின் முகப்புப் பகுதி கடந்த 7ஆம் திகதி திடீரெனச் சரிந்து வீழ்ந்ததால் கட்டுமானப் பணிகள் ஒருசில நாள்கள் தடைப்பட்டன. தற்போது மீண்டும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிடுவதற்காக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிவில் பொறியியலாளர் ஏ.பி.கே.விஜயகோன் தலைமையிலான குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகை தந்தது. இந்தக் குழுவினர் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன், மேற்பார்வையாளர்களான ஆர்.ஜெயபாலன், என்.நிமல்சங்கர் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

கட்டடப் பணிகளையும் பார்வையிட்டனர். (ஐ-17)

## கிராம அபிவிருத்திச் சங்கம் கற்கோவளத்துக்கு அவசியம்

வடமராட்சி,ஜூலை28

பருத்தித்துறை கற்கோவளம் கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தித்தருமாறு அக்கிராமத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான குடும்பங்களைக் கொண்ட கற்கோவளம் கிராமம் ஆழிப்பேரலையின் பாதிப்புக்கு இலக்கானது. பல நிறுவனங்கள் இப் பாதிப்புகளை ஈடுசெய்யும் பொருட்டுப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

சில நிறுவனங்கள் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வந்துள்ளன.

ஆனால், இக்கிராமத்தில் கிராம, அபிவிருத்திச் சங்கம் இல்லை. இதனால், அந்நிறுவனங்கள் மேற்கொள்ளவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் உள்ளது.

பல்வேறு அமைப்புகள் இக்கிராமத்தில் இருக்கின்ற போதிலும் கிராம அபிவிருத்திச் சங்கம் இல்லாததால் அபிவிருத்தி நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன.

ஆகவே தாமதமின்றி இக்கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலரிடம் கோரப்பட்டுள்ளது. (ஒ-173)

## பலத்த காற்றினால் மரங்களில் இருந்து வீழும் விஷ ஜந்துகள்

தென்மராட்சி,ஜூலை28

தற்போது வீசும் பலத்த காற்றினால் தென்மராட்சியில் மரங்களிலிருந்து விஷ ஜந்துக்கள் அதிகம் விழுகின்றன. அவற்றால் கடிபடுவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

கடந்த திங்கட்கிழமை இரவு பாம்பினால் கடியுண்ட வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த இளையகுட்டி ஜெகநாதன் (வயது 30), விஷ ஜந்துகளினால் கடியுண்ட மந்துவில் கிழக்கைச் சேர்ந்த ஜெயக்குமார் மல்லிகாதேவி (வயது 34) ஆகியோர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-117)

### ஆழிப்பேரலை பாதித்த

## வலி.மேற்குப் பகுதி வயல்களின் உரிமையாளருக்கு விதைநெல்

வலி.மேற்கு,ஜூலை28

வலிமேற்குப் பிரதேசத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வயல்நிலங்களின் உரிமையாளர்களுக்குப் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினரால் விதைநெல் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

ஆழிப்பேரலையால் சுழிபுரம், மூளாய், பொன்னாலை ஆகிய இடங்களிலுள்ள வயல்நிலங்கள் பாதிப்படைந்தன. இந்த வயல்களின் உரிமையாளர்களுக்கே விதைநெல் இலவசமாக வழங்கப்பட உள்ளது.

இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக வயல் உரிமையாளர்கள் வயல்களின் அளவு போன்ற விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. (ஒ-175)

## சட்டவிரோத மதுபான விற்பனை மந்துவில் பகுதியில் அதிகரிப்பு

தென்மராட்சி,ஜூலை28

மந்துவில் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் அப்பகுதியில் குற்றச்செயல்கள் பரவலாக இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. சில வீடுகளில் சட்டவிரோத மதுபான விற்பனை இடம்பெற்று வருவதாகவும் -

இங்கு மது அருந்தும் சிலர் வீதிகளில் செல்வோரைத் தகாத வார்த்தைகளால் ஏசுவதாகவும் -

தட்டிக்கேட்க முனைவோர் தாக்குதலுக்கு இலக்காக வேண்டியுள்ளதாகவும் - அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஒ-117)

## நவாலி ஊடாகச் செல்லும் பாடசாலை பஸ்சேவை சீரில்லை

நவாலியூடாக யாழ்ப்பாணம் செல்லும் 786ஆம் இலக்க பாடசாலை பஸ்சேவை சீரில்லாததால் இதில் பயணம் செய்யும் மாணவர்கள் பெரும் கஷ்ரங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்தபஸ் சேவை கடந்த வாரம் முழுவதும் செயற்படவில்லை. இந்த வாரம் ஒரு நாள் மட்டுமே சேவையில் ஈடுபட்டது. பின்னர் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், காலை வேளைகளில் நவாலியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் பஸ்தரிப்பு நிலையங்களில் தவங்கிடந்துவிட்டுப் பின்னர் ஒரு மைல் தூரத்திலுள்ள ஆனைக்கோட்டை பஸ்தரிப்பிடத்திற்கு நடந்து செல்கின்றனர். அங்கும் பாடசாலை பஸ்சேவை தவிர்ந்த ஏனைய பஸ்வண்டிகள் மாணவர்களை ஏற்றாது செல்கின்றன. இதனால், இவர்கள் மீண்டும் வீட்டுக்குத் திரும்ப நேரிடுகிறது.

இந்தச் சேவையை உடன் சீர்செய்யுமாறு பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்கின்றனர். (ஐ-100-204)

## ஜேர்மனியப் பெண்மணியிடமிருந்து பட்டப்பகலில் 'கமெரா' அபகரிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை28

குடாநாட்டுக்குச் சுற்றிலா வந்தவரான ஜேர்மனியப் பெண்ணிடமிருந்து புகைப்படக் கருவி (கமெரா) அபகரிக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் யாழ்.கோட்டை பின்வீதியில் இடம்பெற்றுள்ளது.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவரான அருயமரியசாக என்ற பெண்மணி சுற்றுலா நோக்கில் யாழ்ப்பாணம் வந்தார் யாழ்.நகரில் உள்ள தங்கும் விடுதியொன்றில் தங்கியிருக்கும் இவர் நேற்று முன்தினம் மாலை சைக்கிளில் நகரப் பகுதியைச் சுற்றிப்பார்த்தார் அப்போது அவர் யாழ்.கோட்டையின் பின்புறத்தோற்றத்தினை தனது வீடியோ கமெராவினால் படம்பிடித்தார்.

அச்சமயம் அவ்வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் அவரிடமிருந்து கமெராவைப் பறித்துச் சென்றனர். அந்தவேளை அந்தப்பெண்மணி தனது தாய் மொழியில் அபயம் கேட்டுக் கத்தியதால் அயலில் நின்றவர்களுக்குப் புரியவில்லை.

இதனைப் பயன்படுத்தி கமெராவுடன் இளைஞர்களிருவரும் தப்பிச் சென்றனர்.

இது தொடர்பாக அப்பெண்மணி யாழ். பொலீஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். (ஒ-13)

## தேவை நாடும் மகளிர் அமைப்பின் பெண்கள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை28

'தேவை நாடும் மகளிர் அமைப்பின்' (வின்) யாழ்.அலுவலகம் நடத்தும் பெண்கள் நலன்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

நிகழ்ச்சி அறிமுகத்தைத் தொடர்ந்து தேவை நாடும் மகளிர் அமைப்பின் கொழும்புப் பிரதிநிதி திருமதி சந்திரா தியாகராசா கருத் துரை நிகழ்த்துவார்.

'விதவைகள் பிரச்சினைகள்' தொடர்பாக விதவைகள் ஆதரவு நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர்.சந்திரசேகர சர்மா உரையாற்றுவார்.

'பெண்கள் உள ஆரோக்கியம்' என்னும் பொருளில் வலிகாமம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கோகிலா மகேந்திரன், 'மகளிர்நலன்களில் மனித மேம்பாடுகள்' என்னும்பொருளில் தேவைநாடும் மகளிர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கே.வி.சிவனேசன், 'பெண்களின் சட்ட உரிமைகள்' என்னும் தலைப்பில் சட்டத்தரணி ஆர்.றெமீடியஸ் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர்.

தொடர்ந்து கலந்துரையாடல் இடம் பெறும். (ஐ-204)



## ஜோதிடம்

**Pandit Kr. Luxumy Narasimha**

ஸ்ரீ சாயி பாபா ஜோதிடர் துர்க்காம்பாள் வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ்பெற்ற கேரள மாந்திரீக ஜோதிடர்-கணவன் -மனைவி சண்டை, பிரிவு/காதல் திருமணத்தடை- இதுவரை திருமணமே ஆகாதவர்கள்/ பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது/ வேலை, தொழில் உத்தியோகம் இப்படி பலவாறான பிரச்சினைகளை தீர்த்தும் வைப்பார். செய்வினை, பில்லி சூனியத்தால் பாதிப்பு/கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார்.

தொடர்பு: **SRI SAWBAKYA INN**

Guest House,
235/7,PointPedro Road, Anaipanthy, Jaffna.
T.P.: 021- 222 6779, 077 9233070.

(38176) (21-13-19)

---

20 வருடகால ஈடிணையற்ற பயிற்சி நிலையம்

# கலாலயா

## பயிற்சியகம்

**மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.**

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

*கிழமை நாள் பிரிவுக்கான அனுமதிகள் நிறைவடைந்துள்ள நிலையில், கிழமை நாள் புதிய பிரிவு- II எதிர்வரும் 01.08.2005 (திங்கள்) முதல் ஆரம்பமாகவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.*

### மகளிருக்கான துரித மூன்று மாதகாலப் பயிற்சிகள்

- **கேக் ஐஸிங்** - 22 வகையான கேக் அமைப்புகளில் ஐஸிங் செய்தல் **FONDANT ICING** மாச்சீனி மலர்கள் செய்தல்
- **கூந்தல் அலங்காரம்** - 20 வகையான **HAIR STYLES**
- **உணவு தயாரித்தல் -(COOKERY)**-சிற்றுண்டிகள், மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகள்
- **கைவேலை** - கடதாசி, துணிகளில் அலங்கரிப்பு, முத்துமாலை கோர்த்தல்
- **FABRIC PAINTING** - துணிகளில் சாடிகளில் மண்ணில் வர்ணந் தீட்டல்
- **அடிப்படை முக அழகுக்கலை (FACIAL)** வகுப்புகள்

**பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்**

**6 மாதகால தையல் பயிற்சி,**
**பூவேலை பயிற்சியும் ஆரம்பமாகின்றன**

மேலதிக விவரங்களை காலை 9 மணி முதல் பி.ப.2.30மணி வரையில் நேரில் அறிந்துகொள்ளலாம்.

(C/44302)(21-14-34-26)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 24 - 11 - 1952



விண்ணில் 01 - 08 - 2002

எங்கள் குடும்ப விளக்கு

**அமரர் சின்னப்பு நாகேந்திரன்** (நடராசா)

**திதி: 28-07-2005**

ஆண்டுகள் மூன்று ஆனதப்பா
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் நிழலில் வாழ்ந்த
வாழ்வு போல் இனி வருமா?
உங்கள் ஆத்மசாந்திக்காக
இறைவனை வேண்டுகின்றோம்

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

**நா.ரஞ்சித்குமார்**
(மகன்).

(சி-44367)(26-14-34)

---

## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கம் சின்னப்பிள்ளை

யாழ்ப்பாணம், இல.39/1, சென்.பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்த திருமதி மாணிக்கம் சின்னப்பிள்ளை அவர்கள் 26.07.2005 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி மாணிக்கம் அவர்களின் அன்பு மனைவியும் மலர், காலஞ்சென்ற ராணி மற்றும் மெற்றலின் இராஜேஸ்வரி, அன்ரன் அலெக்ஸாண்டர் (கனடா), குணசீலி ஆகியோரின் பாசமிகு தாயாரும் குமாரசாமி (ஆமி), எட்வேட் (அன னம்ஸ், சங்கானை), துரைராசா, காலஞ்சென்ற அன்ரனி விக்ரர், சாரதா (கனடா), கிளறிஸ்ரன் ஜோர்ஜ் (யா.ப.நோ.கூ. சங்கம்) ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (28.07.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் 39/1, சென்.பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக யாழ்.பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கிளறிஸ்ரன் ஜோர்ஜ்**
**(மருமகன்).**

*39/1*, சென்.பற்றிக்ஸ் வீதி,
**யாழ்ப்பாணம்.**

(சி/44371)(32.14.15.26)

---

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து




யாழ்ப்பாணம், நாவலர் வீதி,
ஆனைப்பந்தியைச் சேர்ந்த
திரு.சாந்தகுமார்
திருமதி யாழினி
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
**செல்வன் சஞ்ஜெய்**
அவர்கள் தமது முதலாவது
பிறந்தநாளை
இன்று (28-07-2005)
வியாழக்கிழமை தனது
இல்லத்தில் குதூகலமாகக்
கொண்டாடுகின்றார்.
செல்வனை அப்பா, அம்மா
மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவரும்
நல்லைக்கந்தன் அருள்
பெற்று சீருடனும் சிறப்புடனும் வாழ வேண்டுமென
உளமார
வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
**திரு.ச.சாந்தலிங்கம்**
383, நாவலர் வீதி.
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்,

(38213)(26-14-34)

---

## துன்பந்தீர அருள்வாக்கு

குழந்தைப் பேறில்லாதவர்கள், திருமணத் தடை, தோஷம் உள்ளவர்கள், குடும்பப் பிரச்சினைகள், வெளிநாடு செல்லத் தடை, தொழிலில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராத நோய் தீர அருள்வாக்குக் கூறப்படும். கொழும்பு 6 பெர்ணாந்து வீதியிலுள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான நாக பூசணி அம்மன் ஆலயத்திலிருந்து வந்த ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் 30-07-2005 முதல் 02-08-2005 வரை யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறவுள்ளார்

தொடர்புகொள்ளவேண்டிய இடம்:
**ஞானவைரவர் ஆலயம்**
**கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை,**
**திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.**

*பூசை நேரம்: காலை 10.30 மாலை 6 மணி*
*02-08-2005 விஷேடபூசை. அபிஷேகம், அன்னதானம் நடைபெறும்.*

(C/44363)(26.14.34)

---

## தாலிக்கொடி தவறிவிட்டது

25.07.2005 திங்கட்கிழமை முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் ரொட்டியாலடிக்கும் இடையில் பெறுமதிமிக்க தாலிக்கொடி ஒன்று (சிலுவையுடன்) தவறிவீழ்ந்துவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியாளரிடம் ஒப்படைத்துதவவும்.

தொடர்பு: **சின்னையா செல்வராசா**


செனித் வோச் வேக்,
கே.கே.எஸ் றோட், சுன்னாகம்.
☎ 077 6635892

(38215) (21-14-34-26)

---

## நினைவு அஞ்சலிகள்.....

**25ஆவது ஆண்டில்....**



**சிமியோன் அன்ரன்**

15-11-1955 பிறப்பு
28-07-1980 இறப்பு

**18 ஆவது ஆண்டில்....**



**கார்த்திகேசு சிமியோன் கந்தையா**

04-11-1913 பிறப்பு
28-07-1987 இறப்பு

**"சீவியத்தில் எம்மை நேசித்தவர்களே**
**மரணத்திலும் எம்மை மறவாதிருப்பீராக"**

இல.04, ஈச்சமோட்டை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (38233)(26.14.34)

**- குடும்பத்தினர்.**

---

### அறநெறிப் பாடசாலை ஆரம்பவிழா

வடமராட்சி,ஜூலை28

மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கம் அறநெறிப் பாடசாலையை ஆரம்பித்துள்ளது.

சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் சோ.கங்காதரன் தலைமையில் நடைபெற்ற இப்பாடசாலை ஆரம்ப விழாவில் வடமராட்சி வடக்குப் பிரதேச கலாசார அலுவலர் திருமதி சுகுணா, கனடா வேதாந்த ஞான மன்றத்தின் இலங்கைக் கிளைத் தலைவர் இராசையா ஸ்ரீதரன், சிவத்திரு இராசையாக் குருக்கள்,மேலைப்புலோலி கிராம சேவையாளர் ந.கந்தசாமி, முன்னாள் கிராமசேவையாளர் வீ.சேதுநாயகம் ஆகியோர் உட்படப் பலர் பங்கேற்றனர். (ஒ-173)

### மணற்காட்டில் மருத்துவசேவை

வடமராட்சி,ஜூலை28

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு, மணற்காடு கிராமத்தில் வாரத்தில் இரு தினங்கள் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் இலவச வைத்திய சேவை வழங்கப்பட்டு வருகிறது.

வாரந்தோறும் பிரதி திங்கள், வியாழன் ஆகிய இரு தினங்களும் பிற்பகல் 4 மணிக்கு அம்பன் அரசினர் மத்திய மருந்தக வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.திருச்செல்வநாயகம் வைத்திய சேவையை வழங்கி வருகின்றார்.

இச்சேவையின்போது வழங்கப்படும் மருந்து வகைகளைப் பருத்தித்துறை இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் வழங்கி வருகிறது. (ஒ-173)

---

**A/L - 2006 அலகு ரீதியான துரித மீட்டல் வகுப்புகள்**

| | |
|---|---|
| தமிழ்: M. சுரேஸ் | புவியியல்: S. கிருஸ்ணா |
| இ.நாக.: கந்த சத்தியதாசன் | அரசியல்: I. திருமுருகன் |
| அளவை: R. ஜெனகன் | நாடக.அர.: I. சத்தியா |

ஆரம்பம்: *29-07-2005* வெள்ளி *4.15* p.m.

**திகழ் கல்வி நிறுவனம்**
K.K.S.வீதி, இணுவில். (38238)

---

### மோ.சைக்கிள் பழகிய இளைஞர் வீழ்ந்து காயம்!

மோட்டார் சைக்கிள் செலுத்தப் பழகிக் கொண்டிருந்த இளைஞர் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியதில் காயமடைந்தார்.

கொடிகாமம், கச்சாய் வீதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த சுகுணலிங்கம் நிரோஜ் (வயது20) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-11)

### சங்கானையில் சமுர்த்திச் சங்கம்

சங்கானை, சண்டிலிப்பாய், காரைநகர் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான சமுர்த்தி மகா சங்கம் இப்பிரதேசத்தின் மையப்பகுதியான சங்கானை பிரதேச செயலகத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.(ஒ-161)

# தமிழீழ நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி வன்னியில் புலிகள் அமைக்கின்றனராம்!

## 'லங்காதீப' சிங்களப் பத்திரிகை தகவல்

கொழும்பு,ஜூலை28

வன்னியில் விடுதலைப் புலிகள் தமிழீழ நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியை நிறுவி வருகின்றனர் என்று இராணுவப் புலனாய்வுத் தகவல்களை மேற்கோள்காட்டி சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

வட்டக்கச்சியில் உள்ள குளம் ஒன்றை அண்டி இந்தப் பாரிய கட்டடத் தொகுதி நிறுவப்பட்டு வருகிறது.

சுமார் நூறு வாகனங்கள் தரித்து நிற்கக்கூடிய தரிப்பிடம் இந்தக் கட்டடத்தின் கீழ் தளத்தில் அமையவுள்ளது. உளவுச் சேவைகள் தகவல்களின்படி இந்தக் கட்டுமானப் பணிகள் சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து இராணுவத்தின் தலைமைப் பீடத்துக்கு அறிக்கை மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கட்டடப் பணிகளுக்குத் தேவைப்படும் சிமெந்து, மணல் மற்றும் கருங்கற்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடாக எடுத்துச் செல்லப்படுவதோடு நாளொன்றிற்கு சுமார் 20-40 வரையான லொறிகளில் சிமெந்து, கருங்கற்கள் போன்றவை ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடாக கிளிநொச்சிக்குப் போய்ச் சேர்வதாகவும் சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

- இவ்வாறு அந்தச் சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

(ஐ-206)

## மருந்துக் கலவையாளர் பயிற்சிநெறி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூலை28

சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையால் ஓகஸ்ட் முதலாம் திகதி நடத்தப்படவிருந்த மருந்துக் கலவையாளர் பயிற்சிநெறி பிற்போடப்பட்டுள்ளதாக பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இப்பயிற்சி நெறி யாழ்ப்பாணம் பிராந்திய நிலையத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் - பயிற்சி நெறி ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-204)

## தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் அச்சிடப்பட்டு தயார் நிலையில் உள்ளன?

கொழும்பு,ஜூலை28

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கான 50ஆயிரம் விண்ணப்பப் பத்திரங்கள் தேர்தல் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அரச அச்சகத்தால் அச்சிடப்பட்டு கடந்த 26ஆம் திகதி தேர்தல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

லங்காதீப சிங்கள நாளிதழ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இது பற்றி அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டுள்ள இந்த விண்ணப்பப் பத்திரத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. பதிலாக 1981ஆம் ஆண்டின் 15 ஆவது இலக்க ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் கீழ் தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பப் படிவம் என்ற தலைப்பு அச்சிடப்பட்டுள்ளது.

இவை தவிர, ஜனாதிபதித் தேர்தல் சட்ட மூலத்தின் ஆங்கிலமொழி மூலப்பிரதிகள் மற்றும் வாக்களிப்பு முறை அறிவுறுத்தல்கள் என்பனவும் அரச அச்சகத்தினால் அச்சடிக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நடைமுறை அறிவுறுத்தல்கள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவோ அல்லது வேறு தேர்தல் தொடர்பாகவோ என்ற விவரங்கள் அச்சடிக்கப்பட்ட பிரசுரங்களில் காணப்படவில்லை. குறிப்பிட்ட அறிவுறுத்தல்களில் அவை எந்தத் தேர்தலுக்கானது என்ற விவரம் பின்னர் றப்பர் முத்திரை மூலம் பதிவுசெய்யப்படவுள்ளது.

இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-206)

## இலங்கையிலும் பறவைக் காய்ச்சல் ஆபத்து; உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை28

'பறவைக்காய்ச்சல்' நோய் விரைவிலேயே பெரும் ஆட்கொல்லி நோயாக மாறி உலகம் முழுவதும் பரவும் ஆபத்து உருவாகி உள்ளது.

- இவ்வாறு பகிரங்க எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றது உலக சுகாதார நிறுவனம்.


இதுதொடர்பாக இலங்கை உட்பட பல நாடுகளுக்கு உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தல்களையும் வழங்கி உள்ளது.

இந்தோனேசியா, வியட்நாம் உட்பட சில ஆசிய நாடுகளில் பறவைக்காய்ச்சல் நோய் ஏற்கனவே பரவியுள்ளது. இதனால், உயிரிழப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன.

உலக சுகாதார அமைப்பு விடுத்துள்ள அறிவுறுத்தலை அடுத்து, பறவைக்காய்ச்சல் தொடர்பாக மிகுந்த எச்சரிக்கையோடு செயற்படுமாறு, இலங்கையில் உள்ள சகல கால்நடை மருத்துவர்களுக்கும் விவசாயத் திணைக்களத்தின் கால்நடை உணவு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பிரிவு ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று ஆட்கொல்லி நோய் தொடர்பான பிரிவு தெரிவித்துள்ளது.

முக்கியமாக பெரும் எண்ணிக்கையில் பறவைகள் ஒரே தடவையில் இறந்துபோகும் சம்பவங்கள் இடம்பெறுமாயின், அது பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆட்கொல்லி நோய் தொடர்பான பிரிவு சகல கால்நடை மருத்துவர்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

(ஐ-206)




தென்மராட்சி,ஜூலை28

சாவகச்சேரி கச்சாய் வீதி, புனித லிகோரியார் தேவாலய நவநாள் உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

ஜூலை 31 ஆம் திகதி திருநற்கருணை ஆராதனையும் ஓகஸ்ட் 6ஆம் திகதி மாலை திருநாள் திருப்பலி பூஜை இடம்பெற்று மறுநாள் காலை திருப்பலி பூஜையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

நவநாள் ஆராதனைகளை பங்குத்தந்தை அருட்திரு. ரவிச்சந்திரன் அடிகள் நடத்துவார்.

(ஒ-117)

* * *

தென்மராட்சி,ஜூலை28

சாவகச்சேரி கச்சாய்வீதி, சந்தன முதலிச்சிபுலம் முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன்ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

ஓகஸ்ட் மூன்றாம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(ஒ-117)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை28

லலித்தூண்டல் கீரிமலை புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 9 மணிக்கு திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

இந்தத் திருவிழாவில் கலந்துகொள்ளும் மக்களின் நலன்கருதி இளவாலை சேந்தான்குளம் சந்திகளிலிருந்து விசேட பேருந்து சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-204)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை28

சுன்னாகம் கதிரமலை சிவன் ஸ்ரீ சொர்ணாம்பிகாதேவி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(ஒ-204)

## ஜீ.சீ.ஈ. உயர்தர மாணவருக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை28

ஜீ.சீ.ஈ.உயர்தர மாணவருக்கான பொதுத் தகவல் தொழில்நுட்பப் பாட வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நல்லூர் லயன்ஸ் கழகம் நடத்தும் இக்கருத்தரங்கு அன்றைய தினம் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறும்.

இதில் அடிப்படைக் கணனியியல், கணனிக் கற்கைக்கான கணிதம் தகவல் தொடர்பு முறை, கணனி மொழி அறிமுகம் ஆகிய பாட அலகுகளுக்கான விரிவுரைகளும் வினாத்தாள் செய்முறைப் பயிற்சியும் இடம்பெறும் என்று நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் கே.விக்னேஷ் தெரிவித்தார். (ஒ)

## அரசமைப்புப் பேரவை மற்றும் தேர்தல் ஆணைக்குழுவை செயற்படவைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை28

அரசமைப்புப் பேரவை மற்றும் தேர்தல் ஆணைக்குழு ஆகியவற்றை சீராகச் செயற்படவைக்குமாறு டிரான்ஸ் பரன்ஸி இன்ரநஷனல்-ஸ்ரீலங்கா என்ற அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட அரசமைப்புப் பேரவை அதன் முன்னைய உறுப்பினர்களது பதவிக்காலம் முடிவுற்றதால் தனது செயற்பாடுகளை நிறுத்திக்கொண்டுள்ளது.

மேலும், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை முன்னைய அரசமைப்புப் பேரவை ஏகமனதாக சிபாரிசு செய்திருந்தபோது ஜனாதிபதி கடந்த 18 மாதங்களுக்கும் மேலாக நியமனம் வழங்கவில்லை. இதன் காரணமாக 17ஆவது திருத்தத்தின் தேர்தல் ஆணைக்குழு தொடர்பான பிரிவுகள் முழுமையாக அமுல்படுத்தப்படாதுள்ளன. இதனால், தற்போதைய தேர்தல் ஆணையாளர் ஓய்வுபெறும் வயதினை தாண்டியும் தனது சுயவிருப்பிற்கு மாறாக தொடர்ந்து பணிபுரிய நிர்ப்பந்திக்கப்பட்டு இருக்கிறார்.

அரசமைப்புப் பேரவையையும் தேர்தல் ஆணைக்குழுவையும் நியமிக்கத் தவறியமை சட்டவாட்சியை பாதிக்கக்கூடிய பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இந்நியமனங்களை நியமிப்பதற்கான தார்மீகக் கடப்பாடு ஜனாதிபதிக்கு உள்ளது. அத்துடன் ஏனைய அரசியல் கட்சிகளும் இதற்கு பங்களிக்கவேண்டும்.

இதனடிப்படையில் ட்ரான் பேரன்ஸி இன்ரநஷனல் ஸ்ரீலங்கா முன்னைய அரசமைப்புப் பேரவையால் சிபாரிசு செய்யப்பட்ட உறுப்பினரை தேர்தல் ஆணைக்குழுவுக்கு நியமிப்பதுடன் புதிய அரசமைப்பு பேரவையையும் நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றது - என்றுள்ளது.

(ஒ)

## நூலுருவில் ஜனாதிபதியின் வாழ்க்கை

யாழ்ப்பாணம், ஜூலை28

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் வாழ்க்கை வரலாறு ஆங்கிலத்தில் நூலாக வெளிவரவிருக்கின்றது.

மார்கரெட் தட்சர் மற்றும் ரொனி பிளேயர் போன்றவர்களின் வாழ்க்கை வரலாறுகளை எழுதியுள்ள பிரபல ஆங்கில எழுத்தாளர் கிராகும வில்சன் என்பவர் குமாரதுங்கவின் வரலாற்றையும் எழுதியுள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி இந்நூல் கொழும்பில் வெளியிடப்படவிருப்பதாக அதன் வெளியீட்டாளர்களான மீடியா பிரிமா நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்நூலின் பிரெஞ்சு, ஜேர்மன், ஜப்பானிய மொழிகளிலான பிரதிகளும் வெளியிடப்படவிருக்கின்றன.

360 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் சிபிகே எனப் பெயரிடப்பட்டுள்ளது.

நூலின் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் ஆழிப்பேரலை அனர்த்த நிதியில் சேர்க்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை28

யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்றிட்டப் பணியகத்தின் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதேச செயலர்கள், உதவிப் பிரதேச செயலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்வர் என யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி சிவலிங்கம் தெரிவித்தார்.

(ஒ-202)

## வணிக குறுவினாப் போட்டி முடிவுகள்

வலி.தெற்கு.ஜூலை28

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, தரம் 11, தரம் 13 ஆகிய வகுப்பு மாணவர்களிடையே வணிகக் கல்வி தொடர்பான குறுவினாப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் விவரம் வருமாறு:-

**தரம் 10**

பா.நீதுஜன் (மகாஜனக் கல்லூரி), ஸ்ரீ. சுபாங்கன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), செ.ஜீவனா (மகாஜனக் கல்லூரி), த.ஜதீகா (சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம்).

**தரம் 11**


கி.பிரதீபன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), ந.சாகினி (இளவாலை கன்னியர்மடம் ம.வி.), வை.இந்துஷா (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்).

**தரம் 13**

இ.ஷாமினி (மகாஜனக் கல்லூரி), சி.வஜிதா (அருணோதயக் கல்லூரி), சு.கிரிஷாந் (வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), இ.அஜந்தா (மகாஜனக் கல்லூரி).

(ஒ-152)

## சாயி சிந்தனை



### மாசுபடாத இதயம்

இன்று நீங்கள் உண்ணும் உணவு, பருகும் நீர் மற்றும் சுவாசிக்கும் காற்று அனைத்தும் மாசுபட்டுப் போயிருக்கின்றன. மனிதனோ, தன் இதயம் முழுவதும் எதிர்மறையான எண்ணங்களை நிரப்பிக்கொண்டு தானே மிகவும் மாசுபட்டுப் போயிருக்கிறான். ஆசைகள் இருக்கலாம் தவறில்லை. அவை ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருக்கவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது நீலநிற மையூற்றி எழுதினால் எழுத்துக்கள் நீலமாகவும் சிவப்புநிற மையூற்றி எழுதினால் எழுத்துக்கள் சிவப்பு நிறமாகவும் காட்சியளிக்கும். அதைப்போலவே உங்கள் இதயங்களில் எதிர்மறையான எண்ணங்கள் இருக்குமானால் நீங்கள் பார்ப்பது, கேட்பது, பேசுவது அனைத்துமே எதிர்மறையாகவே இருக்கும். ஆகவே, முதலில் உங்கள் இதயங்களை அன்பினால் நிரப்புங்கள். பிறகு நீங்கள் பார்ப்பது, கேட்பது, சொல்வது, செய்வது அனைத்தும் அன்புடன் கூடியவையாகக் காட்சியளிக்கும்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

கணபதி நுளை

# பீமரத சாந்தி வைபவ பவளவிழா அழைப்பு



## சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள்
## ஸ்ரீமதி யோ.சுபதாம்பிகை அம்மா

வேதாகமோத்தம ஆச்சார்ய சாரதா சிவாச்சார்ய குருமணி
**சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள் ஸ்ரீமதி யோ.சுபதாம்பிகை அம்மா தம்பதிகளுக்கு**
நிகழும் மாங்களகரமான பார்த்திப வருஷம் ஆடித்திங்கள் 12 ஆம் நாள்

**இன்று (28-07-2005) வியாழக்கிழமை முற்பகல் 11.15 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில்**

பீமரத சாந்தி வைபவத்தை இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் ஞானபாஸ்கரன் **சிவஸ்ரீ தாணு மகாதேவக் குருக்கள்** நடத்திவைப்பார்.

நூல் வெளியீடு: **"சுபயோக மஞ்சரி - பூர்வசந்தானம்"**

பிற்பகல் 2.30 மணிக்கு (பழைய நேரம்)

தலைமை: இந்துமத குரு பீடாதிபதி **சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக் குருக்கள்** (சுதுமலை)
இசைக்கச்சேரி: **சிவஸ்ரீ சோ.உமாரமணக் குருக்கள்** (சுன்னாகம்)
இடம்: **அத்தியடிப் பிள்ளையார் கோயில் கணபதி கலாசார மண்டபம்**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**இனிய நல்வரவை விரும்பும்:**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

அத்தியடிப் பிள்ளையார் கோயில்,
யாழ்ப்பாணம். (38240)(50)

# DISTRICT MINE ACTION OFFICE, JAFFNA

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.

## VACANCY

A vacancy for the Post of Administrative Assistant exists in UN supported Mine Action Office, Jaffna.

Main responsibilities of Administrative Assistant:

- Maintain administration, filling system and all correspondence
- Maintain and update the inventory of all non expendable items
- Maintain administrative control of all consumable items
- Maintain all relevant human resources records
- Maintain cash book
- Liaise with other agencies

Applicants are expected to possess the following:

- Must be a Sri Lankan National and as well as a resident of Jaffna
- Educated up to G C E A/L standard
- Minimum three years of experience in the relevant field
- Competent and experienced in the Micro Soft Office computer package
- Good command of English
- Communication skill in Sinhala would be an advantage

Send in you detailed resume along with name and address of two non related referees to the address given below on or before August 10th 2005. Please indicate "Application for the Post of Administrative Assistant" on the left hand side of the cover.

Technical Advisor
District Mine Action Office
Jaffna

District Mine Action Office, Secretariat, Jaffna.
Telephone: 021-222-3886 email:- dmaojaf@sltnet.lk
மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ் செயலகம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222-3886 மின்னஞ்சல்: dmaojaf@sltnet.lk

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா கந்தசாமி

*(உரிமையாளர் கண்ணன் ஸ்ரோர்ஸ்)*



மாதகலைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கந்தசாமி 23.07.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் அழகம்மாவின் அன்புக் கணவரும் கண்ணன், பிறேமதாசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோகிலாவின் அன்பு மாமனாரும் சாருஷன், சாருபா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் தம்பையா, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2005) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
புத்தூர் சந்தி. (38256)(32-18-34-42)

தகவல்:
*பிறேமதாசன்*
*(தாசன் - மகன்).*

### திருமதி ஏகாம்பரம் சரஸ்வதி



நல்லூரைப் பிறப்பிடமாகவும் இராஜ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் சரஸ்வதி நேற்று (27.07.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ஏகாம்பரத்தின் (ஓய்வுபெற்ற யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, இராசரத்தினம், மதியாபரணம், இராசதுரை, செல்வரத்தினம் (கனடா), தம்பிராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேந்திரா, தேன்மதி (கனடா), கிரிஜா (அமெரிக்கா), பாலேந்திரா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் மாலதி, சூரியகுமார் (கனடா), ஜெகநாதன் (அமெரிக்கா), கிரிஷாந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஷாகினி, பிரகாஸ், பிரஷாந்தி, நிரோஸ் (கனடா), தர்ஷன் (கனடா), ஜெய்சன் (அமெரிக்கா), திவ்யா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.37, இராஜ வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (28.07.2005) வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் தகனக் கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.37, இராஜ வீதி,
நல்லூர். (38261)(42-18-34)

தகவல்:
*க.ஏகாம்பரம்*
*(கணவர்).*

**முன்னோடிப் பரீட்சை**

தரம் II மாணவர்களுக்கான முன்னோடி கணித பாட பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை கல்வி அமைச்சினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படவுள்ளது.

(ஓ-ரி)

## பாதிப்படைந்த சிறுவர், பெண்களுக்கு இலவச உதவி

இல்லத்து வன்முறை, பாலியல் வல்லுறவு, சிறுவர் துஷ்பிரயோகம் ஆகியவற்றினால் பாதிப்படைந்த பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் உளவளத்துணைப் பயிற்சி, சட்ட உதவி, தற்காலிகப் புகலிட வசதி, விழிப்புணர்வுக் கருத்தரங்கு செயலமர்வு ஆகியவை இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை பாதிப்புற்ற பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் ஆதரவளிக்கும் தேவை நாடும் மகளிர் அமைப்பு மேற்கொண்டுள்ளது. (ஒ-175)

**வேலையாள் தேவை**

- உணவு பரிமாறுபவர் (Supplier)
- ரொட்டி மேக்கர்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
**கிரி ஹோட்டல்** (38257)
இல.176, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் முன்பாக.

## கண்ணீர் பூத்தூவல்கள்



ஆவரங்கால் மேற்கு
சிவன் வீதியைச் சேர்ந்த
**அமரர் சரவணமுத்து சுப்பிரமணியம்**
**(பண்டிதர் ஐயா)**

கற்றமைக்கேற்ப சான்றாளர் பண்டிதர் ஐயா- நீவிர்
கற்றுக் கொடுத்தவை ஏராளம் பண்டிதர் ஐயா
உற்றவிடம் இழந்து ஊர்விட்டுப் பிரிந்த நேரம்
ஏற்றுக்கொண்டு எம்மை ஏற்றதொரு வீடும் தந்தீர் ஐயா!
சற்றேனும் சலிக்காது சார்ந்த எம்மை ஏற்று நின்று
உற்றபெரு பாசம் காட்டி உறவு காத்தீர் ஐயா!
முற்றிநிற்கும் பேரறிவால் முதிர்வு நிலை காட்டாது
குற்றங்குறை கூறாது கூடி எம்மைச் சேர்ந்து நின்றீர் ஐயா!
அற்றை நாளில் நாங்கள் கண்ட அந்தச் சுகத்தை மறந்திடாது
இற்றை நாளும் நினைத்து நிற்க நிமலன் பாதம் சேர்ந்தீரோ!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*ஐயா அவர்களின் பிரிவால்துயருறும் அவர்தம் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.*

இடைக்காடு,
அச்சுவேலி.
(38255)(42-18-34)

**குகன் மாஸ்ரர்**
**நிர்மலா**
**குடும்பம்.**

எதிர்வரும் முதலாம் திகதி முதல் பதினைந்தாம் திகதிவரை பின்வரும் பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவிருப்பதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**Certificate of Computer Awareness Course - CCAC**

உயர்தரப் பரீட்சை எழுதியவர்கள் மற்றும் கணனித்துறையில் காலடி வைக்கவிருப்பவர்களுக்காக வழங்கப்படும் சிறப்பு பாடநெறி.

பாடவிதானங்கள்: 16 காலம்: மூன்று மாதங்கள்
கட்டணம்: 1250/- மட்டுமே அங்கீகரிப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

Diploma in Computer Studies
Diploma in Video Editing
Diploma in Graphic Design
Diploma in Desktop Publishing
Diploma in Multimedia & Maya
Diploma in Hardware Engineering

இலங்கை மற்றும் இந்திய மல்ரிமீடியா கல்லூரிகளில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கற்கைநெறிகளை கற்பிக்கவிருக்கின்றார்கள்.

ஜெயதாஸ Dip. in MD
சிவகணேசன் MSc
துஸ்யந்தன் MSc
ஆதி Dip. in CGA (கம்ப்யூட்டர் எக்ஸ்பிரஸ் சஞ்சிகை எழுத்தாளர்)
அருண்குமாரஸ்வாமி Trinity College of Music UK

**50% தொடக்கம் 65% வரையான சிறப்புக்கட்டணச் சலுகையில் உடனே இணைந்திடுங்கள் இத்திட்டம் எதிர்வரும் 15ம் திகதிவரை மட்டுமே வழங்கப்படும்.**

**வார, வார இறுதி மற்றும் இரவு நேர வகுப்புக்கள் நடத்தப்படும்.**

YTS
**YAARL TECH SYS.**
No. 3, Sir Pon Ramanathan Rd.,
Kaladdy Junction - Jaffna
Tel: 0773 206207

## விவேகானந்த சபை கொழும்பு அகில இலங்கை சைவசமயப் பாடப் பரீட்சை - 2005

*மேற்படி பரீட்சையானது 13.11.2005 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கான விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்கனவே பாடசாலைகளுக்கு 2004 ஆம் ஆண்டுப் பரீட்சைப் பெறுபேறுகளுடன் அனுப்பப்பட்டுள்ளன.*

*புதிதாக விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள் பரீட்சை தொடர்பான விவரங்களுக்கும், விண்ணப்பப் பத்திரங்களுக்கும் சபையின் கௌரவ பொதுச் செயலாளருடன் கடிதம் மூலம் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.*

**க.இராஜபுவனீஸ்வரன்,**
கௌரவ பொதுச் செயலாளர்.

34, விவேகானந்தமேடு,
கொழும்பு -13.
தொலைபேசி: 2422646
Fax No: 4614133 (சி-44376)(21-18-34-42)

## விற்பனைக்கு
## LG HDD & DVD Recorder

Free Recorder - 80 Hour Recording (Maximam)
Time shift, 2 way copy (HDD, DVD)

- All in all play back
- Music Photo album
- Time shift
- Progressive scan
- DV in put (LEEE 1394)
- Front AV & Video input
- Scart
- Easy Editing Function
- Play List Function
- Easy Title name writing என்பன அடங்கிய

LG HDD & DVD Recorder விற்பனைக்குண்டு.

(38232) (2138-12-16)

பிரியங்கா போட்டோஸ் அன்
வீடியோ புரடெக்சன்
இல.57, கே.கே.எஸ் றோட், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
T.P. 077 6079537


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 699 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 26-7-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 4625338-4641913 |

வெற்றி இலக்கங்கள்
02 06 43 50

லக்கினம் மகரம்

ஜக்பொட் பரிசு ரூபா.17,57,500/- வெல்லப்பட்டுள்ளது
இந்த வெள்ளிக்கிழமை ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,67,196 | 10/- | 36,71,960/- |
| 2.இலக்கங்கள் | 33,698 | 20/- | 6,73,960/- |
| 1.இல லக்கினம் | 33,580 | 30/- | 10,07,400/- |
| 2.இல லக்கினம் | 3,093 | 100/- | 3,09,300/- |
| 3.இலக்கங்கள் | 895 | 500/- | 4,47,500/- |
| 3.இல லக்கினம் | 78 | 5,000/- | 3,90,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 17,57,500/- | 17,57,500/- |
| | | மொத்தம் | 85,57,620/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 96,09,870/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 96,09,870/-
தொடர் இல. 5583413 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 ஜூலை 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 4631584-2-52 |
| புத்தளம் | 4640930-9-42 |
| திருகோணமலை | 4630718-6-96 |
| கம்பஹா | 4630037-7-13 |
| கேகாலை | 4628721-8-66 |

## நன்றி நவிலல்
## அந்தியேட்டி ஆத்மசாந்தி



### திருமதி
### புனிதவதியார்

13.07.2005 அன்று இறைபதம் எய்திய எமது குலவிளக்கின் மறைவுச் செய்திகேட்டு நேரில்வந்தும், தொலைபேசி, தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்தும், இறுதிச் சடங்கில் நேரில் கலந்துகொண்டும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியும் பல்வேறு வகைகளில் ஒத்துழைப்பும் நல்கிய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.07.2005) வியாழக்கிழமை வெள்ளவத்தை அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் வத்தளை கோகுலம் சிறுவர் இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் நடைபெறும் என்பதை அறியத்தரவிரும்புகின்றோம்.

13/24, 59, ஆவது ஒழுங்கை,
மனிங்பிளேஸ்,
வெள்ளவத்தை.
T.P.: 077 6367431
2555108

கருணை ஆனந்தன்
(சகோதரன்),
குடும்பத்தினர்.

(P-44384)(38-12-16)

## போக்குவரத்து அமைச்சர் ரயில்வே அமைச்சரானார்

போக்குவரத்து அமைச்சின்கீழ் இருந்த முக்கிய பொறுப்புகள் பலவற்றை நேற்று ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க திடீரென தம்வசம் எடுத்துக்கொண்டார்.

இதனையடுத்து இதுவரை போக்குவரத்து அமைச்சராக செயற்பட்டு வந்த பீலிக்ஸ் பெரேரா நேற்று ரயில்வேத்துறை அமைச்சராக ஜனாதிபதி சந்திரிகா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அவசர அவசரமாகப் போக்குவரத்து அமைச்சின் முக்கிய பொறுப்புகள் பலவற்றை ஜனாதிபதி ஏன் ஏற்றுக்கொண்டாரென உடனடியாகத் தெரியவரவில்லை. ஆனால் போக்குவரத்து அமைச்சுத் தொடர்பில் தெரிவிக்கப்பட்ட பல முறைப்பாடுகளையடுத்தே ஜனாதிபதி இந்த நடவடிக்கையை மேற்கொண்டார் எனக் கூறப்பட்டது. போக்குவரத்து அமைச்சின்கீழ் இருந்த போக்குவரத்துச்சாலை,14 கொத்தணி பஸ் நிறுவனங்கள் போன்றன இனிமேல் ஜனாதிபதியின் கீழ் இருக்கும். இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்றுப் பிறப்பிக்கப்பட்டது. (எ-க)



D.C.C.A யாழ்ப்பாணம்.
S.L.A.S. வழிகாட்டல் வகுப்பு

| | |
|---|---|
| பொது அறிவு | T.தவசேகர் |
| பொது விவேகம் | பொன்சந்துரு |
| சுருக்கம் | P.மகாலிங்கசிவம் |
| கட்டுரை | |
| பொருளியல் | E.G.வரன் |
| அரசியல் | பொன்சந்துரு |
| கலை | M.சந்திரன் |

சனி,ஞாயிறு 11.30 A.M.. அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
D.C.C.A. மக்கள் வங்கி அருகில் ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(38190)(38-16-12)

Swan
டீசல் என்ஜின்

- மிக மேன்மையான நம்பிக்கை
- 4 ஸ்ரோக் என்ஜின்
- 20 H/P வரையிலான சக்தி
- உதிரிப்பாகங்கள் உண்டு



விற்பனைக்குப் பிந்திய சேவையுடன் கூடியது

ஏக முகவர்கள்
சென்ட் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்
524 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி : 112324261, பெக்ஸ் 112446554
நாடெங்குமுள்ள விநியோகஸ்தர்களிடமும் கிடைக்கின்றன.

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
ஷாம், லைலா, அஸின், பூஜா நடித்த
உள்ளம் கேட்குமே (ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே).



29 ஆம் திகதி முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
தாஸ்

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்
பெப்ரவரி 14
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

நாதன்ஸ் சினிமா
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடான அர்ஜுன், சினேகா,கிரண், வடிவேல் நடித்த
சின்னா (ரீலஸ்)
அடிதடி, காதல், நகைச்சுவை



கா.நே.: 10.30,2.30, 6.30,9.30. (பு.நே.)


## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும் மதிப்பிற்குமுரியவரும் கிழக்குப் பிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையங்களின் முன்னாள் தலைவரும் ஊரிக் காடு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் 'சாய் கிளினிக்' இல.78, மட்டக்களப்பு வீதி, கல்முனையைவசிப்பிடமாகவும் கொண்ட

### வைத்தியகலாநிதி இரா.சிவஅன்பு

அவர்கள் 27.07.2005 அன்று பகவானின் பாதாரவிந்தங்களை அடைந்த செய்தி எமக்கு மிகுந்த மனவேதனையைத் தருகின்றது. அன்னாரின் பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

V.சேனாதிராஜா
'சாய் இல்லம்'
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(38260)(38-16-12)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன்
சி.கலாமோகனின் சகோதரர்

### சிவசுப்பிரமணியம் மயூரன்

அவர்கள் 25.07.2005 திங்கட்கிழமை அகால மரணமடைந்துவிட்டார். அவருக்கு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கும்.
நண்பர்கள்.
(38258)(38-16-12)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் கோகுலன் (கோகு)



சாவகச்சேரி, சரசாலை தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் கோகுலன் அவர்கள் 26.07.2005 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - சாந்தநாயகி தம்பதியரின் அருமை மகனும் மயூரன், காண்டீபன், செந்தூரன், அபிராமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆதினியின் மைத்துனரும் கீர்த்தனா, ஆரூரன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கமலாசனி லேன்,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
வ.நேசகுமார்
(மைத்துனர்).

(38266)(38-16-12)

### சிவசுப்பிரமணியம் மயூரன்



(யா / இந்துக் கல்லூரி உயிரியற்பிரிவு - 1999)

வேலணை மேற்கு, முடிப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் மயூரன் அவர்கள் 25.07.2005 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் - ஜெயலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் சிற்பவன் (பேராதனைப் பல்கலைக் கழகம், பொறியியற்பீடம்), கலாமோகன் (கொக்குவில் இந்துக் கல்லூரி கணிதம்- 2003), யோகபாலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி உயிரியல் - 2005), உமைபாலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி- கணிதம்-2006) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்..

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'சுந்தர பவனம்'
47,K. K. S. வீதி,
கொக்குவில் மேற்கு. கொக்குவில்.

தகவல்:
சே. சிவசுப்பிரமணியம்
(தந்தை).

(38272)(38-12-16)

### திருமதி சரஸ்வதிதேவி வேதநாயகம் [சோதி]



சண்டயாளி, காரைநகரைப்பிறப்பிடமாகவும் சங்குவேலி தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதிதேவி வேதநாயகம் அவர்கள் 26.07.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆண்டி - சின்னம்மா (கனடா) தம்பதியரின் அன்புமகளும் அந்தோனிப்பிள்ளை வேதநாயகம் அவர்களின் அன்பு மனைவியும் அந்தோனிப்பிள்ளை காலஞ்சென்ற தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் சயந்தன் (இந்தியா), மகிபன், கிருஷாந்தினி ஆகியோரின் அன்புத் தாயும் கோணேஸ்வரி (இந்தியா), செல்வராணி (கனடா); கதம்பமலர், வேலும்மயிலும் (இந்தியா), புஸ்பராணி (கனடா), திருச்செல்வம் (கனடா), யோகேஸ்வரி, ஜெயமாலினி (கனடா), பத்மராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மு.வல்லிபுரம் (காரைநகர்) அவர்களின் பெருமகளும் அருமைத்துரை, துரைசிங்கம், செல்வராசா, மரியதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன்கோயிலடி,
சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
அ.வேதநாயகம்
(வவி - கணவர்).

(38269)(38-12-16)

## துயர் பகிர்கின்றோம்



தோற்றம் 28-11-1980 மறைவு 25-07-2005

### சிவசுப்பிரமணியம் மயூரன்

(உயிரியற் பிரிவு - 1999, யாழ்- இந்துக் கல்லூரி)

எங்களில் ஒருவனாக நேற்றுவரை
ஒன்றாய் உடனாய் நின்றவனே
இன்றுமட்டும் ஏன் தனியனாய் சென்றாய்?
மீளாத் துயில் மீண்டு மீள்வரமாட்டாயா...?

25.07.2005 அன்று இடியென வந்த அகாலமரணச் செய்திகேட்டு அதிர்ச்சி அடைவதுடன் அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உன்பிரிவால் துயருறும் யா/இந்துவின் மைந்தர்கள்.
(38271)(38-12-16)

# பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டில் கைதான இளைஞனுக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி,ஜூலை28

சாவகச்சேரி கச்சாய் பகுதியில் பாடசாலை மாணவி ஒருத்தியைப் பலவந்தமாகக் கடத்திச் சென்று வீடு ஒன்றில் தடுத்து வைத்து அவரைப் பாலியல் வல்லுறவுக் குட்படுத்தினார் என்று கூறப்படும் இளைஞர் ஒருவரை அடுத்தமாதம் ஐந்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

இச்சம்பவம் தொடர்பாக பிரஸ்தாப மாணவியின் தந்தையார் செய்த முறைப்பாட்டை அடுத்து கொடிகாமம் பொலீஸார் சம்பந்தப்பட்ட இளைஞனைக் கைது செய்திருந்தனர்.

கடந்த 11 ஆம் திகதி நள்ளிரவு வேளை குறிப்பிட்ட மாணவியின் வீட்டினுள் பிரவேசித்த இந்த இளைஞர், அங்கு உறக்கத்தில் இருந்த மாணவியை அவரது வாயைப் பொத்திப் பிடித்துத் தூக்கிவந்து தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கடத்திச் சென்றார் என்றும் -

பின்னர் அந்த மாணவியை வீடு ஒன்றுக்குக் கொண்டு சென்று அங்கு இரு தினங்கள் தடுத்துவைத்து அவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார் என்றும் மாணவியின் பெற்றோர்களால் முறையிடப்பட்டுள்ளது.

பிரஸ்தாப மாணவி வைத்தியப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார். இவர் ஜீ.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருப்பவர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-31)

## மோதரைப் பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப் பிணையிலும் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

போலி கடனட்டையை பயன்படுத்தி சுமார் இருபத்தியையாயிரம் ரூபா பொருள்களை வாங்கியவர் என்று கூறப்படும் ஒருவரை, சட்டத்திலிருந்து விடுவிப்பதற்கு 25 ஆயிரம் ரூபா லஞ்சமாக இவர் பெற்றார் எனக் கூறப்படுகின்றது.

# வவுனியாவில் பெரும் எழுச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை, முல்லைத்தீவு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ச.கனகரத்தினம், மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி மு.பொன்னம்மா, திருகோணமலை தமிழ்மக்கள் பேரவைச் செயலாளர் கௌரி முகுந்தன், யாழ்ப்பாணம் தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் சொலமன் சு.சிறில், அம்பாறையைச் சேர்ந்த மாவீரர் லெப்டினன்ட் கேணல் பாவாவின் சகோதரர் செ.கமலேஷ்வரன், வவுனியாவைச் சேர்ந்த மாவீரர் பெரியண்ணனின் மகன் பா.தர்சன், மன்னாரைச் சேர்ந்த இரு மாவீரர்களின் தாயாரான திருமதி சந்தான் சந்தாள் ஆகியோர் ஏற்றினர்.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ.விக்னேஸ்வரன் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

இந்து சமயம் சார்பாக ஸ்ரீலஸ்ரீ கலாதர சர்மாவும், கிறிஸ்தவ மதம் சார்பாக கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளாரும், முஸ்லிம் மக்கள் சார்பாக வவுனியா நகர பள்ளிவாசல் மௌலவியும் ஆசியுரைகளை வழங்கினர்.

தொடர்ந்து தமிழர் மீதான இலங்கை அரசின் அடக்குமுறைகள் தொடர்பாக ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. 'ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட கல்விப்புறக்கணிப்பு' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி நந்தகுமாரும், 'தமிழினப் படுகொலைகள்' என்ற தலைப்பில் நரேஸ் மாஸ்டரும், 'ஸ்ரீலங்கா அரசின் கடல் வலய ஆக்கிரமிப்பும் கடல்வளச் சிதைவும்' என்ற தலைப்பில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனச் செயலாளர் க.சூரியகுமாரும் ஆய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். இதேபோல மொத்தமாக 14 தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.கனகசபை, செ.கஜேந்திரன், இரா.சம்பந்தன், தமிழக ஓவியர் செ.புகழேந்தி, விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

இடையிடையே பெண்கள் பண்பாட்டு மையத்தினரின் எழுச்சிப் பாடல்களும் இடம் பெற்றன.

பிரமுகர்களின் உரைகளுக்கு ஆதரவாளர்கள் அனைவரும் உரத்த தொனியில் கரகோஷம் எழுப்பினர். நிகழ்வுகள் அனைத்தும் மிகவும் எழுச்சிபூர்வமாக - உணர்வுபூர்வமாக நடந்தன. இந்த நிகழ்வு இடம் பெற்ற வவுனியா வைரவப் புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தைச் சூழவுள்ள பகுதிகள் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பிரதான வீதிகளில் பெருமளவு பொலீஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது.

இந்த எழுச்சி மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மதகுருமார், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விமான்கள் என சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்துகொண்டனர். இறுதியாக பேராளர்கள் அனைவரும் எழுந்து நிற்க மாநாட்டின் பிரகடனம் வாசித்து வெளியிட்டுவைக்கப்பட்டது.

(எ-த-க-7)

# வேலணை சாட்டியில் இராட்சத கடல்வாழ் உயிரினத்தின் எலும்புக்கூடு

வேலணை சாட்டி கடற்கரையில் சுமார் 40 அடி நீளமான இராட்சத கடல்வாழ் உயிரினம் ஒன்றின் எலும்புக்கூடு ஒன்று நேற்று கரையொதுங்கியது.

மேற்படி இராட்சத எலும்புக்கூடு கரையொதுங்கிய செய்தி பரவியதை அடுத்து தீவுப்பகுதியின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பொதுமக்கள் சாட்டி கடற்கரையில் ஒன்று கூடினர்.

இதற்கிடையில் - செய்தியை அறிந்தவுடன் அப்பகுதிக்கு விஜயம் செய்த கடற்படையினர் குறித்த இராட்சத எலும்புக் கூட்டை டிராக்டரில் ஏற்றிச் சென்றனர் என்றும் -

பின்னர் அந்த எலும்புக் கூட்டை தமது முகாமின் முன்பாக காட்சிக்கு வைத்துள்ளனர் என்றும் - கூறப்பட்டது. (எ-167)

## ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வானொலி சேவைகளில் பணியாற்றும் சகல மொழிப் பத்திரிகையாளர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

சுதந்திர ஊடகவியலாளர் இயக்கம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், முஸ்லிம் மீடியா போரம் ஆகிய அனைத்து ஊடகத்துறை அமைப்புகளும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

## மட்டக்களப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பைச் சேர்ந்த கிருஷ்ண பிள்ளை கிருபாகரன் என்ற இளைஞரே இச் சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளார்.

கொழும்பு டாம் வீதியில் உள்ள லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்த மேற்படி இளைஞர் வெளிநாடு ஒன்றுக்கு செல்வதற்காக கொழும்புக்கு வந்திருந்தார் எனக் கூறப்பட்டது. இவர் புலிகளின் உளவுப் பிரிவைச் சேர்ந்த உறுப்பினராக இருக்கலாம் எனத் தாங்கள் சந்தேகிக்கிறார்கள் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட இளைஞர் கருணா குழுவில் செயற்பட்டவர் என இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ-க)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட பிரமுகர் ஒருவர் நேற்று உதயனுக்கு கூறி னார்.

இந்த விவகாரத்தில் கட்சிக்குள் மாற்றுக் கருத்துகள் இருக்குமானால் இரகசிய வாக்கெடுப்பென்றை நடத்துவதற்கும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என அவர் மேலும் கூறினார்.

(எ-க)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் மட்டக்களப்பு பொலீஸார் தெரிவித்தனர்.

கொலையுண்டவர் இரவு உணவை தனது வீட்டில் அருந்திவிட்டு நண்பர்ஒருவருடன் வீதியில் வந்துகொண்டிருந்தபோது வீதியில் மறைந்திருந்த இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இவரது உறவினர் ஒருவர் தற்போது ஈ.பி. டி.பி. இயக்க உறுப்பினராகவுள்ளார் எனவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கொலைசெய்யப்பட்டவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் மட்டக்களப்பு தலைமையகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சுட்டுக்கொல்லப்பட்டவரான பங்கிராஜா ஜோர்ஜ் ஈ.பி.டி.பி. உறுப்பினர் என்று தமிழ் நெற் இணையத்தளம் தெரிவித் தது. ரமேஷ் என்று நன்கு அறியப்பட்ட இந்த நபர் செங்கலடியிலுள்ள ஈ.பி.டி.பி. முகாமைச் சேர்ந்தவர் என்றும் அது தெரிவித்துள்ளது.

(எ-க)

## போர் திணிக்கப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரம்கூட விடுதலைப் புலிகள் ஓய்வாக இருந்தவர்களில்லை. ஆனால், தமிழ் மக்களுக்கு நியாயமான ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக, இனப்பிரச்சினைக்கு நியாயமான வழியில் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக, கடந்த மூன்றரை வருடங்களாகப் புலிகள் பொறுமைகாத்து வருகின்றனர். எனினும் அரசு யுத்தத்தை நோக்கியே தனது நகர்வுகளைக் கொண்டு செல்கிறது.- என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-த-க-7-164)


**IIS COMPUTER COURSES**

ஆரம்பமாகியுள்ள புதிய பிரிவுகளுக்கு IIS நிறுவனம் தனது 10வது வெற்றியாண்டுச் சிறப்பு கட்டணச் சலுகைகளை வழங்கிவருகிறது. இச்சலுகை 31.07.2005 வரை மட்டுமே என்பதை மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்

Director
IIS, # 100 Clock Tower Road, Jaffna.

**பதவி வெற்றிடம் விவசாய களநிலை உத்தியோகத்தர்**

விவசாயம் சம்பந்தமான நுண் அறிவுடன், விவசாயம் சார்ந்த துறையில் 3 வருட அனுபவத்துடன் ஆர்வமுள்ளவர்கள் கீழ் குறிப்பிட்ட எமது முகவரியில் 30.07.2005 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளோர் விரும்பத்தக்கது. வயதெல்லை 25 - 40 வரை.

Tilko Holidays (Pvt.) Ltd.
பிரதம தபாலகம் அருகில்
70/6, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல: 021 222 5969, 021 222 7291
(38251)


# மரண அறிவித்தல்கள்

## வின்சன் டி போல் (வின்சன்)



நல்லூர் ஆசிர்வாதப்பர் வீதியை பிறப்பிடமாகவும் 1/10, புதுவீதி, கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வின்சன் டிபோல் 26.07.2005 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேற்பிள்ளை - சபினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இமெல்டா ஜெயம்மா (லவ்வுளி) யின் அன்புக் கணவரும் ஜெனோ வின்சலாவின் (ஜேர்மனி) பாசமிகு தந்தையும் லோகநாதனின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (29.07.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொய்யாத்தோட்டம் புனித கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1/10, புது வீதி,
கொய்யாத்தோட்டம். (38277)(38-16-12)

தகவல்:
லோகநாதன் வின்சலா
(மகள்).

## நமசிவாயம் குணரத்தினம் (சொக்கர்)



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் K.K.S வீதி, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் குணரத்தினம் அவர்கள் நேற்று (27.07.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.07.2005 பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S. வீதி,
இணுவில் மேற்கு,
இணுவில். (38278)(38-16-12)

தகவல்:
கு.குகதாசன்
(மகன்).


**NEW SCIENCE COLLEGE**
PHYSICS
பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
அலகுரீதியான மீட்டல்
SAT.,SUN. -9.00-11.00(A.M.)
PAPER CLASS
MON.,WED.-6.15-7.15(A.M.)
2007A/L
அலைகளும்,அதிர்வுகளும்-SAT.,SUN.-11-12(A.M)
ஒளியியல் - SAT.,SUN.- 4.00-5.00(p.m.)
ஆரம்பம்:-30.07.2005
M.கருணாநிதி
(38275)(17-12-16-38)

**தரம் : 5 புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை 2005**
திரு.கணேசலிங்கம் (Bed., I S A, பிரதம பரீட்சகர்) அவர்களின்
மூன்றாவது முன்னோடிப்பரீட்சை
29.07.2005 வெள்ளிக்கிழமை 4.15 இற்கு
பரீட்சை எழுதுவோரும், வினாப்பத்திரம் தேவையானோரும் இன்று தொடர்புகொள்ளவும்.
தரம்: 4 முதல் O/L வரை 2 ஆம் தவணைப் பரீட்சை வினாத்தாள்களை பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெறலாம்.
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(நல்லூர் முருகன் கோயில் முன்பாக)
30.07.2005 திருமலையில் பரீட்சையும், கருத்தரங்கும்.
தொடர்புகளுக்கு:- 0773126807
(38254)(17-12-16-38)

**S.L.A.S.**
பிரிவு-II
BY.T.திருமுருகன்
ஆரம்பம்:-29.07.2005
04.15(P.m.)
(பாடக்குறிப்புகள் வழங்கப்படும்.)
(38239)
திகழ் கல்வி நிறுவனம்
k.k.s வீதி, இணுவில்

**ELITE INSTITUTE**
147,கச்சேரி நல்லூர் வீதி, யாழ்.நகர்.
PERSONAL ENGLISH
G.A.Q,B.A.Part-I
Revision and Paper
மாலை நேர வகுப்புகள்
ஆரம்பம்:-இன்று
28.07.05.
TUE,THU. - 6-7 (P.m.)
7.00 - 8.30 P.m
BY.Mr.MAHESWARAN
(37095)

**தேவை**
ஆட்டோ ஓட்டுநர்(சாரதி அனுமதிப் பத்திரத்துடன்)
பெயின்ரர் (பழக விரும்புபவர்களும் தேவை)
தச்சுவேலை தெரிந்தவர்களும்,வெல்டிங்வேலை தெரிந்தவர்களும்,பழகுபவர்களும் தேவைப்படுகின்றனர்.
நேரில்வரவும்.
ஏசியன் தளபாட நிலையம்
இல.133,மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:0777 536108 (C/44359)(17-12-16-38)

வணிகக் கல்வியும் கணக்கீடும்
O/L 2005
paper class
start-28.07.05
Thu.-5.p.m.
By.K.B.kajan
தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(37981)

**D.C.M.**
யாழ்.நகர்
LOGIC
S.R.J(சுதன்)
PAPER CLASS
ஆரம்பம்:-30.07.05
சனி-11.00(a.m)
(ப.நே)
(38146)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.